நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

Registered as a Newspaper in Sri Lanka

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ் - 8 ஏப்ரல் / மே - 91. விலை : ரூ : 5/-


## கிழக்கில் தலையுதிர்காலம்

கடந்த இரு வாரங்களாக கிழக்கிலிருந்து பீதி தரும் செய்திகள் தொடர்ந்து வந்த வண்ணமுள்ளன. குறிப்பாக மட்க்களப்பு நகரின் பல பகுதிகளிலும் தீடீர், திடீரென ஆயுதங்கள் சகிதம் வாகனங்களில் வந்தவர்களால் இளைஞர்களும், யுவதிகளும் இழுத்துச் செல்லப்படுகின்றனர்.

பின்னர் எங்காவது ஆற்றில் தலையில்லாது முண்டம் மட்டும் மிதந்தபடியோ, அல்லது பாலங்களுக்கு கீழ் சாக்குமூடைகளில் கட்டப்பட்டபடியோ அல்லது இன்னும் ஏதாவது ஒரு முகாமுக்கருகில் ரயர் போட்டு எரிக்கப்பட்டதில் எரியாது நீட்டிக் கொண்டு கிடந்த கையையோ காலையோ நாய்கள் இழுத்து வந்ததில் அடையாளம் காண முடியாதபடி போனவனையோ/ போனவளையோ..... இப்படித்தான்!

89இல் ஜே.வி.பி என்ற பெயரில் கொல்லப்பட்ட அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட இறைஞர்களின் படுகொலையை இக்கணத்தில் எண்ணாதிருக்க முடியவில்லை.

கிழக்கில் தொடரும் இப்பதட்ட நிலைமைகளால் இரண்டு மணியுடனே வீடுகளுள் அடங்கிப் போகுமாறு நெஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

ஆனால் இக்கடத்தல்களும் கைதுகளும் பட்டப்பகலில் பத்துப் பதினொரு மணியளவிலேயே தொடர்வதால் நகரில் ஒன்பது மணிக்குப் பிறகு சன நடமாட்டமே அற்று விடுகிறது. கடைகளோ ஒற்றைக் கதவில்; ரியூட்டறிகள் யாவும் இழுத்துப் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன.

இது தவிர ஏப்ரல் 19ம் திகதி கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸை சியாம்பலாண்டு என்ற இடத்தில் மறித்து சோதனையிட்டோர் பஸ்ஸிலிருந்து புஷ்பராணி செல்லையா(30) இழுத்துச் சென்றுள்ளனர். இவர் பேராதனைப் பல்கலைகழக பல் மருத்துவ பீட இறுதி வருட மாணவி. இவர் பற்றி இது வரை எதுவித தகவலும் இல்லை. இதே இடத்தில் கடந்த மாதத்தில் மட்டும் இவ்வாறு எட்டுப் பேர் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனரென்பதும் அவர்களைப் பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்பதும்இங்கு குறிப்பிடத் தக்கது.

இவையெல்லாம் அங்கிருந்து கிடைக்கின்ற தகவல்கள். கிழக்கு மாகாணத்தைப் படையினர் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாக அரசு எப்போதோ அறிவித்த பின்னர் தான் இவ்வளவும் நடந்திருக்கிறது.

கடந்த ஜூனில் ஆரம்பித்த யுத்தத்தினால் தமது உறவுகளையும், வீடுகளையும், சொத்துக்களையும் இழந்து துப்பாக்கிக்கும், ஷெல்லுக்கும் பலி கொடுத்தது போக பட்டினிக்கும், பாம்புகளுக்கும் மீதிப் பலி கொடுத்து காடுகளில் ஒழிந்து வாழ்ந்து மக்கள் பழையபடி மெல்ல மெல்ல தமது கிராமங்களுக்குச் சென்று மூச்சுவிட ஆரம்பிக்க பழையபடி அச்சமும் பீதியும் ஆட்கொண்டாயிற்று.

வடக்கிலோ வவுனியாவிலும், யாழ்குடாவின் தீவுப் பகுதியிலும் புலிகளுக்கு எதிரானது என்ற பெயரில் ஒரு உக்கிரமான யுத்தத்தைக் கட்டவிழத்து விட்டுள்ளது அரசு:

தீவுப் பகுதி யுத்தத்தில் பெருமளவானோர் கொல்லப்பட்டதாகவும், மீதிப்பேர் யாழ்ப்பாணத்தின் நகர்ப் பகுதியை நோக்கி இடம் பெயர்ந்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல் தெரிவிக்கின்றன.

இது தவிர வவுனியா-மன்னார் வீதியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பிரெஞ்சு மருத்துவக் குழுவைச் சேர்ந்த நால்வர் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் படுகாயமடைந்துள்ளனர்.

கிழக்கின் ஆட்கடத்தல்களும், வடக்கில் முடுக்கி விட்ப்பட்டுள்ள பலியெடுப்பு யுத்தமும் மே தினத் திருவிழாக்களிலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரக் கேரிக்கைகளிலும் காணாது போயிற்று.

இந்த நிலையில் தான் கடந்த 19ம் திகதி பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசிய ஜனாதிபதி பேச்சுவார்த்தை மூலமாக தீர்வுகாண முன்வருமாறு புலிகளுக்கு அழைப்பு விடுத்தார். தொடர்ந்த மேதினக் கூட்டத்திலும் உள்ளூராட்சி சபை தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் இந்தப் பேச்சுவார்த்தை, அமைதிவழி பற்றியே ஜனாதிபதி தொடர்ந்து பிரலாயித்து வருகிறார்.

தமிழர் வரலாற்றில் இந்தப் பேச்சுவார்த்தைகளும், அமைதி வழிகளும் ஒன்றும் புதயனவல்ல. எனினும் கொழும்புத் தமிழ்த் தலைமைகள் - முனையை யாழப்பாணத் தலைமைகளாக இருந்தவை; ஒரு போதும் முழுத் தமிழ் மக்களின் தலைமைகளாக இவை இருக்கவில்லை என்று சொல்லலாமோ? - இந்தப் போச்சுவார்த்தை பற்றிய் பேச்சை பாராட்டியும், வரவேற்றும் பேசியுள்ளன.

ஆனால் பேச்சுக்களைழக்கிற ஒவ்வொரு போதும் தமிழ் மக்களது பிரச்சினைக்கு அரசு ஏதாவது ஒரு தீர்வை வைத்திருக்கிறதா என்றால் அதுவுமில்லை. அதைப்பற்றி இந்தத் தமிழ்த் தலைமைகள் அலட்டிக் கொள்வதுமில்லை. (அவைகளிட்மே தமிழ் மக்ளது பிரச்சினைக்கு உருப்படியான ஏதாவதுதொரு தீர்விருந்தால் தானே?).

ஒரு புறம் கிழக்கிலும் வடக்கிலும் தொடர்ச்சியான வன்முறைகளையும், இராணுவத் தீர்வையும் உக்கிரப்படுத்தி வரும் அரசு மறுபுறம் வல்லிபுரத் தகடு பற்றிய ஆய்யும், முழு இலங்கையையும் பௌத்த சிங்களமே ஆட்சி செலுத்தியது என நிரூபிப்பதிலுமே தொடர்ந்து தனது கவனத்தைச் செலுத்தி வருகிறது என்பதைப் புரிந்து கொள்வது ஒன்றும் கடினமான விடயமல்ல.


இந்தத் தமிழ்த் தலைமைகளுக்கு இவை புரியாமற் போனது ஒரு புறமிருக்க; ஆட்சிக்கு வரத்துடிக்கும் எதிர்க்கட்சிகளும் இதுபற்றி மௌனம் சாதிப்பதுவும் கூட புதினமானதல்ல.

அரசுக்கும் தமக்குமிடையே இனிமேல் நடைபெறும் எந்தவொரு பேச்சுவார்த்தையும் இந்தியமத்தியஸ்தத்துடனேயே நிகழும் என புலிகளின் தலைவர்களிலொருவரான கிட்டு லண்டனிலிருந்து அறிவித்துள்ளார்.

ஏற்கனவேயான இந்திய இலங்கை ஒப்பந்தமும், இந்தியப் படை வருகையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை எவ்வளவு

தூரம் பின்தள்ளின என புலிகள் உணராது விடினும் தமிழ் மக்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்.

எனவே இலங்கை அரசும் சரி, ஏனைய தமிழ்க் குழுக்களும் சரி, புலிகளும் சரி ஒன்யைப் புரிந்து கொள்ள வேண்டும்: தமிழ் மக்களுக்குத்ட தேவையானது வெறும் எலும் புத்துண்டுகளல்ல!



ஓவியம் : பிரதீத். நன்றி : மாவத்த-91.

உள்ளே:

- ரஞ்சன் படுகொலை
- முஸ்லிம் தலைமையும் தேசியப் போராட்டமும்
- பாஞ்சாலி
- கத்தாருடன் பேட்டி
- பெண்களும் மனித உரிமையும்

நன்றி - நூலகத்திட்டம்



அரசாங்கத்தின் பத்திரிகையான Daily news (உண்மையில் அது Daily noose!) அண்மைக்காலங்களாக வல்லிபுரம் தங்கத் தகடு பற்றிய ஆய்வில் இறங்கியிருக்கிறது. தொல்லியல், வரலாற்று 'ஆவணங்'களைக் காட்டி யாழ்ப்பாணமும் சிங்கள பௌத்தர்களின் பிரதேசமே என்று ஓலமிடுவதே இந்த 'ஆய்வுக'ளின் நோக்கம்.

பிக்கு வல்பொல சிறி ராகுல (அவருடைய சிங்கள இனவாதம் அனைவரும் அறிந்ததே) இந்த வல்லிபுரம் தங்கத் தகடு பற்றி அருமையான ஒரு கதை விடுகிறார். விசய மன்னனின் காலத்ததாகக் கருதப்படும் இத் தகட்டில் உள்ள சாசனச் செய்தியின் அடிப்படையில் (இந்த அடிப்படைக்கு எவ்வளவு தூரம் விஞ்ஞான பூர்வமான பக்கச்சார்பற்ற பங்கு இருக்கிறது என்பது பெரிய கேள்வி!) அதியுத்தம ஜனாதிபதி பின்வருமாறு கூறுகிறார்.

அன்றும் ஐக்கிய இலங்கையின் கீழே மக்கள் தொழிற்பட்டார்கள் என்பதற்கு இந்தத் தகடு நல்ல உதாரணம். மன்னர்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் தங்களுடைய பிரதிநிதிகளை நியமித்தார்கள் பௌத்தமே இலங்கை முழுவதும் மேலோங்கியிருந்தது.

பிக்கு வல்பொல சிறி ராகுலவோ இன்னும் ஒரு படி மேலே சென்று "கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணக் குடாநாடு மற்றைய எல்லாப் பிரதேசங்களைப் போலவே அநுராதபுர அரசனின் ஆட்சியின் கீழே இருந்தது" என்று கூறுகிறார்.

இந்த வல்லிபுரத் தகடு திடீரென்று ஜனாதிபதியினதும், பௌத்த மதக் காவலர்களான இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தினதும் கவனத்திற்கு வந்ததன் காரணம் என்ன?

'அதியுத்தம' ஜனாதிபதியே இந்த விளையாட்டிற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. சிங்கள பௌத்தப் பேரிவாதிகளின் அரசும் அதன் தொல்லியல் கட்டியகாரர்களும் மறந்துவிடுகிற பல விஷயங்கள் உண்டு. முதலாவது யாழ்ப்பாணத்தையோ அல்லது வேறெந்தத் தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களையோ தொல்லியல்/ வரலாற்றுச் 'சான்று'கள் மூலம் உரிமை கொண்டாட வேண்டுமானால் முதலில் இந்தப் பேரினவாதிகள் செய்ய வேண்டியது பௌத்தம் தோன்றிய இந்தியாவையும் மற்றும் ஏனைய பௌத்த பிரதேசங்களையும் 'சிறிலங்கா'வின் பகுதிகளாகப் பிரகடனப் படுத்த வேண்டியது!

இரண்டாவது பேராசிரியர் பரணவித்தான எனும் சிங்களத் தொல்லியலாளர் (சாசனவியலாளரும் கூட) பல சந்தர்ப்பங்களில் பிழை பிழையாக வாசித்து விளக்கிய தகவல்களைக் கொண்டு சிங்கள பௌத்தத்தை நிறுவுவது இப்போது பல ஆய்வாளர்களால் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது என்பது. (உதாரணம், சுதர்சன் செனவிரத்தினா, பொன்னம்பலம் ரகுபதி, பூங்குன்றன், பியதிஸ்ஸ சி. க. சிற்றம்பலம் போன்ற இன்றைய ஆய்வாளர்களின் கருத்துக்களைப் பார்க்க வேண்டும்)

மூன்றாவது, ஒரு வாத சௌகரியத்துக்காக வடபுலம் பௌத்த சிங்களப் பிரதேசமே என்று எடுத்துக் கொண்டாலும் இன்று மட்டுமல்ல இனி என்றைக்குமே அது சிங்கள பௌத்தப் பிரதேசமாக மாறும்/ மாற்றப்படலாம். என நினைப்பது கனவு ஏனென்றால் யார் விரும்பியும் விரும்பாவிட்டாலும் வடபுறம் இன்று ஒரு அரசு (State) அல்லது மெல்ல மெல்ல உருவாகிக் கொண்டு வருகிற ஒரு அரசு (State in the formation) இந்த யதார்த்தம் எல்லோராலும் உணரப்பட்டு விட்டது மட்டுமல்ல இதனை புரிந்து கொள்ள மறுப்பவர்களுக்கு அமிர்தலிங்கம் அவர்களின் பொன்மொழி ஒன்றை மட்டும் சொல்லலாம் "உங்களுடைய தீர்வுகள் எப்போதும் too little; too late".

வல்லிபுரத்தைப் பற்றி இன்னொரு சிங்கள பௌத்த ஆய்வாளரின் விளக்கமும் அது தொடர்பாக யாழ்ப்பாணம் பற்றி அவர் சொல்லும் கருத்துக்களும் சுவாரசியமானவை. அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனம் (Institute of Fundamental studies), கண்டியைச் சேர்ந்த டி. ஜி. ஏ. பெரேராவின் 'முத்தான' கண்டுபிடிப்பு இதோ: யாழ்ப்பாணம் என்ற பெயர் யஹபனே என்ற சிங்களச் சொல்லின் திரிபு யஹ என்றால் நல்ல நீர் என்று சிங்களத்தில் அர்த்தமாம், யாழ்ப்பாணம் என்பது தமிழில் (யான் - பானம் என்று பிரிந்து) கப்பல் தண்ணீர் என்று கருத்தாம். தமிழின் 'ன'கர, 'ண'கர பேதங்களும் 'ல'கர 'ழ'கர பேதங்களும் தெரியாதது தான் போக மாவிட்டபுரத்துக்கு அவர் கொடுக்கிற வியாக் கியானத்தைப் பாருங்கள், இது உண்மையில் மாவட்டு - புர என்றும் மகாதித்த பட்டண என்றும் மஹாவம்சம் சொல்லும் இடமாம். சாவகச் சேரியை - சிங்களத்தில் ஜாவக கோட்டய என்று அழைப்பார்களாம். சாவகர்களுடைய சேரி என்பது போய் 'கோட்டாய்' என்பது கோட்டை எனும் தமிழ்ச் சொல்லின் திரிபு என்பதும் ஆய்வாளருக்குத் தெரியாமல் போகிறது. இவர்கள் இந்த ரீதியில் தொல்லியலும் இடப்பெயர் ஆய்வும் செய்தால் நமக்குள்ள ஒரே வழி என்னவென்றால், ஆச்சி வந்து மதவில் இருந்தபடியால்தான் 'மதவாச்சி' என்ற பெயர் வந்தது என்றும், அத்தான் வந்து கல் எறிந்தபடியால் தான் 'அத்தன கல' என்றும் பெயர் வந்தது என்று 'ஆய்வுக் கட்டுரை' எழுதவேண்டியதுதான். கதையோடு கதை தமிழ், நாட்டில் நாகர் கோவிலில், பண்டாரவளை என்ற கிராமம் உண்டு! அதுவும் சிங்கள பௌத்த கிராமமோ?

சிங்கள தமிழ் தென்னிந்திய இடப்பெயர்களுக்கிடையில் மிகப் பல ஒற்றுமைகள் உள்ளன. சரியான, சார்பற்ற முறையில் ஆய்வு செய்ய இலங்கை அரசுக்கு விருப்பமும் இல்லை, அக்கறையும் இல்லை, இன்னும் சொல்லப்போனால் பயமும் கூட - எங்கே தங்களது 'ஆரியத் தன்மை' கெட்டு விடுமோ என்று!

அவ்வகையான ஆய்வுகள் செய்யப்படும் வரை பேரினவாத 'ஆய்வே' இருக்கும் அதற்கெதிராக தமிழ்ப் பேரினவாத ஆய்வு மேலே வரும்!

கங்கை கொண்ட கடாரம்வென்ற.... (ect)!

## 'தாமுடம'

'தாமுடம' என்றால் என்ன? ஏதோ பழைய சங்க இலக்கியங்களிலும், இடைக்காலக் காவியங்களிலும் பெய்யப்பட்டிருக்கும் நூற்றுக் கணக்கான பழந்தமிழ்ச் சொற்களில் ஒன்று என்று நீங்கள் நினைத்தால் தவறு! தாமும் மட என்பது புணர்ச்சியின் போது 'தாமுடம' எனப் பிறந்ததோ என நீவிர் ஐயுறின் ஐயகோ! அதுவும் வழு! பின்னர்- 'தாமுமட' என்பது என்ன? 30 சிறீ 6136 எனும் இலக்க இலங்கைப் போக்குவரத்துச் சேவையின் பேரூர்தியில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் கொழும்பு என்று எழுதப்பட்டிருந்தது. கொழும்பின் தமிழ்ப் பெயராக இருந்தது. தாமுமட! வாழ்க தமிழ்மொழி! வாழ்க நிரந்தரம்! வாழிய! வாழியவே!

## மெல்லத் தமிழினி

நீண்ட பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, மார்ச் மாதத்தின் இறுதி நாட்களில் கண்டியில் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளிக்கும் சாதத்திய விழா ஒன்று நடைபெற்றது பலருக்கும் தெரிந்த விடயம் அப்போ, பலருக்கும் தெரிந்த விடயத்தை சரிநிகரில் எழுதுவதன் நோக்கம் என்ன என்று வாசகர்கள் யோசிக்கக் கூடும்.

காரணம் இல்லாமல் இல்லை.

முதலாவது காரணம் நடந்தது தமிழ் சாகித்திய விழா என்பதை விட அமைச்சினதும் அமைச்சர்களதும் புகழ் பாடும் விழா என்பதாகவே அது தோற்றம் கொடுத்தது என்பது.

இரண்டாவது காரணம், இந்து கலாசார அமைச்சினல் நடத்தப்பட்டதோ என்னவோ விழாநிகழ்ச்சிகளின் போதும் இந்து மத குறிப்பாக சைவமத ஆதிக்கத்தை காணக்கூடியதாக இருந்தது என்பது. மூன்றாவது காரணம் இலங்கை அரசின் 'மும்மணிகள்' கோட்பாட்டை வலியுறுத்துவதாக மூன்று இனத்தைச் (முஸ்லிம்களை ஒரு தனி இனக் குழுமம் என்று சொல்கிறயா? சீனக்காழயர்களும் இருக்கிறர்கள் - இன்னமும்!) சேர்ந்தவர்களும் பங்குபற்றிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன என்ற போதும் இதில் எந்தப் புதுமையும் இருக்கவில்லை. எனக்கு நினைவு தெரிந்த காலம் முதல் தமிழ் மக்களது நிகழ்ச்சிகளில் சிங்களத்தில் அறிவிப்பு செய்வதும் சிங்களவர் பங்குப்றுவதும் - குறிப்பாக கொழும்பிலோ கண்டியிலோ நடப்பதாக இருந்தால்-நடந்து கொண்டு தான் வருகிறது, ஆனல் எந்தச் சிங்கள மொழி நிகழ்ச்சிகளிலும் 'தமிழ்' பாவிக்கபடுவதில்லை. என்பதுதான் என்னுடைய தலையாய பிரச்சினை.

இந்து சமய கலாசார அமைச்சின் தமிழ் விவகாரத்திற்கு பொறுப்பானவர்களால் நடத்தப்பட்ட இந்த விழாவின் கடைசிநாள் நிகழ்ச்சியின் போது பிரதம மந்திரியும் வருகைதந்திருந்தார். அமைச்சர் தேவ்ராஜ் அவர்கள் பேச எழுந்த போது - இந்த விழாவினை நடத்துவதற்கு பொறுப்பாக இருந்தவர் இவரே - வழமைபோல பலத்த கரகோசம் எழுந்தது. கரகோசம் முடிந்ததும், மழலைச் சிங்களத்தில் அவர் பேசத் தொடங்கினர். சிங்கள மொழி புரியாத, தமிழ் விழா என்பதால் அனைத்து நிகழ்ச்சிகளும் தமிழிலேயே நடக்கும் அதுவும் குறிப்பாக தமிழ் அமைச்சர் தமிழிலேயே பேசுவார் என்று எதிர்பார்த்த சபையோர் மத்தியிலிருந்தவர்கள் தம்மைத் தாமே ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதைக் கவனித்தேன். சிங்களப் பேச்சு முடிந்ததும் தனது சிங்களப் பேச்சில் இருதிருக்கக் கூடிய தவறுகளுக்காக பிரதமரிடம் மன்னிப்புக் கோரிவிட்டு அவர் பிறகு தமிழில் பேசினர்.

"அமைச்சர் ஏன் முதலிலே தமிழில் பேசவில்லை" என்றூர் எனக்கு முன்னால் அமர்ந்திருந்த ஒருவர் மற்றவரிடம்.

"தெரியாது அவரைத் தான் கேட்கவேணும், ஒருவேளை பிரதமருக்கு விளங்க வேணும் என்பதற்காக இருக்கலாம் என்றூர் மற்றவர்.

"சபையிலிருக்கிறவர்களுக்கு விளங்குவதை விட பிரதமருக்கு விளங்குவது தான் முக்கியமானதா?" என்றூர் முதலில் கேள்வி கேட்டவர் திரும்பவும்.

"அப்படி எண்டால் எல்லா நிகழ்ச்சிகளையும் சிங்களத்தில் மொழி பெயர்த்திருக்கலாமே..... நம்மப் பிரதமர் தமிழில் பேசுகிறரா "என்று" அவர் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு திரும்பவும் சொன்னர்.

இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு உண்மையில் ஒரு எரிச்சல் உணர்வு ஏற்படத்தான் செய்தது. "என்னதான் இப்படி ஒரு மனோபாவமோ" அரசாங்க அமைச்சர் என்றுள் இப்படித்தான் பிறகு செய்ய வேணுமோ?" பிரதமர் தனது உரையை சிங்களத்தில் ஆற்றினர். மொழிபெயர்ப்பாளர் - இவர் திடீரென ஒழுங்கு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேடையில் தோன்றுவதும் பதுங்குவதுமாக தனது தமிழ் மொழி பெயர்ப்பை ஒப்பித்தார். ஆற்றல்மிக்க இந்த மொழி பெயர்ப்பாளருக்கு வசதியாக ஒலிவாங்கு ஒழுங்கு செய்யப்படாததால் அவர் பிரதமருக்கருகிலிருந்து ஒலிவாங்கியை நோக்கி துள்ளி துள்ளி அதே வேளை ஒடுங்கிப் போய் நின்றபடி பேச வேண்டி இருந்தது. இந்த வேடிக்கை எனது எரிச்சலை இன்னமும் அதிகரித்தது. அவர் படும் அவஸ்தையை கண்டு இறங்கி யாரோ ஒரு ஒலிவாங்கியை அவரது கையில் கொடுத்தார்கள். அதன் பின் அவர் மேடையின் பீன்னல் மறைந்து கொண்டு மொழி பெயர்த்தார்.

இந்தச் சம்பவம் நடந்து கொண்டிருந்த போது முதலில் உரையாடிய இருவரையும் நோக்கினேன். அவர்கள் எழுந்து வெளியே போய்விட்டிருந்தார்கள். இதைப்பார்த்துச் சகிப்பதைவிட ஒரு சிகரட் புகைப்பது அவர்களது மனதுக்கு சில வேளை திருப்தியாக இருந்திருக்கக்கூடும்.

ஆனல் அவர்களது உரையாடல் எனக்கு திரும்பத்திரும்ப ஞாபகத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

கூடவே இன்னும் ஒரு விடயம் ஞாபகத்திற்கு வருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு சாகித்திய மண்டலப் பரிசு தமிழ் நூல்களுக்கு வழங்கப்பட்ட போது, அந்தப் பரிசுகளை வாங்க வேண்டாம், தமிழின அழிப்பில் ஈடுபடும். ஒரு அரசிடம் பரிசு வாங்குவது தவறு, கதைப் பகிஸ்கரிக்க வேண்டும் என்று சில எழுத்தாளர்கள் ஒரு பிரசுரம் வெளியிட்டு ஒரு எதிர்ப்பியக்கமும் நடத்தியிருந்தார்கள்.


'இந்துசமய கலாசார தமிழ் மொழி மூலாக்கல் அமைச்சு பிறகு அமுலாக்கல் தேவையில்லை என்பதிலோ என்னவோ இந்து சமய கலாசார அமைச்சாக குறுகிவிட்டது. தமிழ் மொழியும் இழைமே நாட்டில் ஒரு 'விவகாரமாக' மாறிவிட்டபின் தமிழ் மொழி விவகாரங்கள் இப்படித்தான் ஏனே தானே என்று ஒப்பேற்றல் சடங்காக நடப்பது யதார்த்த உண்மையாகிவிட்டது. கடந்த பத்தாண்டுகாலமாக வெளிவந்த நூல்களில் தமிழ் மக்களின் கடந்தகால பிரச்சினைகளை வெளிப்படையாக கொண்டு எழுந்த எந்த நூலும் பரிசலிக்கப்படவில்லை என்பதைவிட அப்படி ஒரு பிரச்சினை இந்த நாட்டில் இருப்பதே மறந்து போய்விட்டது பலருக்கு என்பதே எனக்கு உறுத்திய பிரச்சினை, எப்படியோ இது இலங்கை அரசு, இங்கு தமிழ் மொழிக்கு இப்படித்தான் ஒரு நிலமை இருக்கும் என்பதில் ஆச்சரியப்படவோ, ஆத்திரப்படவோ என்ன இருக்கிறது?

'சாகித்தியப் பரிசைப் பகிஸ்கரிபபோம்' என்று பத்தாண்டுகட்கு முன்னர் சொன்ன தமிழ் எழுத்தனர்கள் இப்போது எதுவும் பேசியதாகத் தெரியவில்லை. பேசுவதற்கு கூட ஒரு அடிப்படை நம்பிக்கை இருந்தால் அல்லவா பேசமுடியும்? இலங்கை அரசினதும் அதன் ஆதிக்கத்திலுள்ள சாகித்திய மண்டலத்தினம் அங்கீகாரமோ, பாராட்டோ, தமிழ் மொழிக்கோ, தமிழ் இனத்திற்கோ ஏதாவது செய்யும் நோக்குடன் நடத்தப்படுகிறது என்ற கொஞ்நஞ்ச எதிர்ப்பு இருந்தாலாவது எதிர்த்துப் போராடலாம், எதிர்ப்பை தெரிவிக்கலாம்.

அதைவிட இதைப்பற்றி கதை கொடுக்காமல் விடுவதே மேலானது என்று அவர்கள் நினைத்திருக்க கூடும்....

'ரோமாபுரி எரியும் போது பிடில் வாசித்த நீரோவின் வாசிப்பில் சுருதி பேதம் இருந்தது பற்றி யாராவது விமர்சித்துக் கொண்டிருப்பார்களா என்ன?' என்று என்னைப் பற்றிக்கூட யாராவது கேட்கக்கூடும்.....
கேட்கலாம், கேட்பதில் நியாயமிருக்கிறது.

ஆனல் ரூபவாஹனி முதல் வீரகேசரி வரை எல்லோரும் ஆஹா ஓஹோ என்று கூறிக்கொண்டிருக்கும் போது உண்மை வேவெருன்று என்று நினைக்கவாவது ஒரு சின்னக்குறிப்பு அவசியம் என்று தோன்றியது. எனக்கு....
இது நாலாவது காரணம்....
இனி ஐந்தாவது ஆறாவது காரணங்களையும் எழுதுவது தேவையா என்ன? விட்டுவிடுவோம்!.



நன்றி - நூலகத்திட்டம்



# முஸ்லிம் தலைமையும் தேசியப் போராட்டமும்

க. மா. இராசையா.

இலங்கைத் தேசியப் பிரச்சினையின் வர்த்தமானக் கட்டத்தின் முக்கிய அம்சங்களுள் ஒன்று முஸ்லிம்கள், குறிப்பாகத் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழுமிடங்களிலுள்ள முஸ்லிங்கள் தமிழர்களிலிருந்து அந்நியப்படுத்தப்படும் முறைமையாகும்.

## தந்திரோபாயம்

இலங்கையில் தமிழர்கள் தங்கள் ஆட்சியமைப்பு நிலை யாது என்று பெரும்பான்மைச் சிங்கள இனவாதத்தை நோக்கிக் கோரிக்கை விண்ணப்பங்களும் போர்க் கொடியும் கிளப்பிய பொழுதுகளில், தமிழர்களையும் முஸ்லிங்களையும் பிரிப்பதற்குச் சிங்கள அரசியல்வாதிகள் பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளனர். எந்த ஒரு நாட்டிலும் பெரும்பான்மையினருக்கும் நாட்டின் மிகப் பெரிய சிறுபான்மையினருக்கும் அரசியற் போராட்டங்கள் ஏற்படும் பொழுது சம்பந்தப்பட்ட அரசு இரண்டாவது பெரிய சிறுபான்மையினரை முதலாவது பெரிய சிறுபான்மையினருடன் மோதவிடும் தந்திரோபாயம் அரசியலில் அரிச்சுவடியாகும்.

அந்த நடைமுறை இம்முறையும் தவறாது பின்பற்றப்படுகின்றது. ஆனால், இம்முறை அந்த ஊக்குவிப்பு தமிழர் முஸ்லிங்கள் உறவினை நிரந்தரமாக ஊறு செய்யும் வகையிலமைந்துள்ளமையை நாம் அவதானித்துக் கொள்ளல் வேண்டும்.

வ–கிழக்கு முஸ்லிங்களைக் கொண்டே தமிழரின் உரிமைப்போராட்டத்தை ஊறு செய்வதற்கும், மலினப்படுத்துவதற்கும் தேசிய சர்வதேசிய மட்டங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. முஸ்லிங்களின் பெயரால் முஸ்லிங்களினது தலைமையினைக் கொண்டே இந்த விடயங்கள் நடத்தப்படுகின்றன. 'ஆட்டு வித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே.'

## புனித போரா?

உள்நாட்டு நிலையில் இஸ்லாமிய அடிப்படை வாதக்குழு ஒன்றின் மூலம் வன்செயல்கள் அவிழ்த்து விடப்பெறுகின்றன. தமிழர்களை எதிர்த்துப் போராடுவது என்பது மத நிலைப்பட்ட ஒரு புனித போர் ("ஜிஹாத்") எனத் தொழிற்படும் குழுவின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் பல உள்ளன.

முஸ்லிங்களுக்கு மாத்திரமே உரியதான ஊர்காவற்படைகளைத் தோற்றுவித்து கிழக்கின் பிட்டு அடுக்குப் போன்ற தமிழ் முஸ்லிம் சனப்பரம்பலைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் மீதான வன்செயல்களுக்குத் தூபமிடப்பட்டுள்ளது.

இது முன்னரும் (1985 – 1987) காணப்பட்டதுதான். முன்னர் இல்லாததும் இம்முறை காணப்படுவதுமான ஒரு அம்சம் யாதெனில், தமிழர் பெரும்பான்மையாகவுள்ள பிரதேசங்களில் வசிக்கும் முஸ்லிங்கள் தாங்கள் தமிழர் – சிங்களவர் யுத்தத்தில் அகப்படாது, தப்பி மதவாச்சி, புத்தளம் போன்ற இடங்களுக்குச் செல்வதற்கான உந்துதல் ஏற்படுத்தப்பட்டுள்ளமையாகும்.

## மூன்று மட்டங்களிற் பிரசாரம்

சர்வதேச அரங்கில், உள்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த 'செட்டிங்' நன்கு ப்பயன்படுத்தப்படுகின்றது.

'தமிழ்ப் போராளிகள் தங்களிடையே வாழும் முஸ்லிங்களை இம்சிக்கின்றனர்' என்ற இந்தக் கோஷத்தை சர்வதேச அரங்கில் மூன்று மட்டங்களில் முஸ்லிம் தலைமை பயன்படுத்தப் பார்க்கின்றது.

முதலாவது, மத்திய–கிழக்கு நாடுகள் சிலவற்றில் தமிழுரிமைப் போராட்டம் பற்றி நிலவும் கருத்தினை அழிக்க முனைவதாகும். லெபனான், சிரியா ஆகிய நாடுகளிலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரிடையேயும் ஈழத் தமிழுரிமைப் போராட்டம் ஆதரிக்கப்பட வேண்டியது என்ற ஒரு கருத்துண்டு. இப்பொழுது இஸ்லாமிய அடிப்படை வாதத்தைப் பயன்படுத்தி அதனை உடைக்கப் பார்க்கின்றனர்.

இரண்டாவது, தென்னாசிய நாடுகளில் (சார்க் நாடுகளிடையே) இந்தப் போராட்டம் பற்றிய ஒரு திரிபான விளக்கத்தைக் கொடுக்க முனைதல். பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு ஆகியன பிரதானமாக இஸ்லாமிய நாடுகளே. (பாராளுமன்றக் குழு நேபாளத்துக்கு இதுவரை போகத் தவறியுள்ளமையை நோக்குக)

மூன்றாவதாக, இந்தியாவில் தமிழர் விடுதலைப் போராட்டம் பற்றியும், குறிப்பாக 'விடுதலைப் புலிகள்' பற்றியும் பாதிப்புத் தரும் நிலைமையை ஏற்படுத்த முனைதல். பொதுவாக இந்திய முஸ்லிங்களிடையே மாத்திரமல்லாது, குறிப்பாகத் தமிழ்நாட்டு முஸ்லிங்களிடையே ஈழப்போராட்டம் பற்றிய ஒரு தவறான கருத்துப் பதிவினை ஏற்படுத்துவதும் நோக்கமாகும்.

இந்த மூன்று மட்டங்களிலும் தமிழ் முஸ்லிம் வேறுபாட்டை வற்புறுத்த முனைந்துள்ள இலங்கை முஸ்லிம் தலைமை இலங்கையிலுள்ள தமிழர்களுக்கும், முஸ்லிங்களுக்கும் – குறிப்பாக வட–கிழக்குப் பகுதி வாழ் முஸ்லிங்களுக்கும் தமிழருக்குமுள்ள அந்நியோந்நிய உறவைப்பற்றி எதுவும் எடுத்துக் கூறவில்லை.சர்வதேசிய நிலையில் இவ்வாறு தமிழ் முஸ்லிம் விரோதத்தை வற்புறுத்தும் பொழுது சிங்கள–முஸ்லிம் உறவிலுள்ள பிரச்சினைகள் எதுவுமே முன்வைக்கப்படவில்லை

*(அ) கொழும்புமுதல் காலிவரை, கண்டியுட்படப் பல இடங்களில் முஸ்லிங்களின் வர்த்தக மேலாண்மை உடைக்கப் பெற்றது பற்றியோ –*

*(ஆ) இலங்கையில் முஸ்லிங்கள் பெரும்பான்மையாகவிருந்த ஒரேயொரு மாவட்டமான அம்பாறையில் (1981 இல் 41 வீதம்) முஸ்லிங்களின் காணிகள் அரசாங்கத்தால்சுவீகரிக்கப்பட்டது பற்றியோ –*

*(இ) மாகவலி திசை திருப்புத் திட்டத்தின் பிரதேச முஸ்லிம் கிராமவாசிகளுக்கு நிலங்கள் வழங்கப்படாது விடப்பட்டமை பற்றியோ –*

*(ஈ) சிங்கள–மொழி வழிக் கல்வியை ஏற்றுச் சிங்களத்தைப் படிக்கத் தொடங்கிய முஸ்லிங்கள் அது பின்னர் பௌத்த சிங்களமாக மாறுவது கண்டு சிங்கள மொழி வழிக் கல்வியை விட்டுத் தமிழ் மொழி வழிக்குத் திரும்ப வேண்டியது பற்றியோ –*

*(உ) சிங்களக்கல்வி காரணமாகத் தமது ஒருமைப்பாடு தகர்வதைக் கண்டு இலங்கை முஸ்லிங்களுக்குள்ள அச்சம் பற்றியோ–*

எதுவும் பேசாது இலங்கை முஸ்லிங்களை இன்று எதிர்நோக்கும் பிரச்சினை தமிழர் உரிமைப் போராட்டமும் தமிழ்ப் போராளிகளும் தான் என்ற கருத்தே முன்வைக்கப்பட்டுள்ளது.

## நோக்கம்: வடக்கு கிழக்கு இணைப்பை உடைத்தல்

இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் உலகளாவிய வன்மையைப் பயன்படுத்தி இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் இணைவையும், ஒருமைப்பாட்டையும் உடைப்பதே இந்த முயற்சிகளின் அடிநோக்கமாகும்.

1987 ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடக்குக் கிழக்கு இணைவை 1990 யுத்தத்தின் முடிவில் உடைக்க வேண்டும் என்பதற்காக இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனலாம். திருகோணமலையையும், அம்பாறையையும் தம்மிடத்தில்லாத ஸ்ரீலங்காவைக் கற்பனை செய்வது அவர்களுக்குக் கடினமாகவே உள்ளது.

1983–87–ப் போராட்டத்தின் பெறுபேறாக மேற்கிளம்பிய வடக்குக் கிழக்கு இணைவை அழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு முயற்சி முனைப்புகளில் தமிழ் முஸ்லிம் களமும் ஒன்றாகும்.

## கருத்திபேதம்

முஸ்லிம்–தமிழ் அரசியல் வேறுபாடுகளை அழுத்தமாக விவரிக்கும் பணி இலங்கை முஸ்லிம் தலைமையிடத்து விடப்பட்டுள்ளது. ஆனால் அந்தத் தலைநிலையிற் கிளம்பும் ஒலியினூடே பலத்த கருத்திபேதம் இருப்பதை அந்தத் தலைக் குரல்களால் மறைக்க முடியவில்லை, முஸ்லிங்களுக்கான ஒரு தனிமாகாணம் இருப்பது பிழையென ஜனாப் எம். ஏ. முகம்மதுவும் வட–கிழக்கில் முஸ்லிங்களுக்கு ஒரு தனிமாகாணம் வேண்டுமென ஜனாப் எம். எச். எம். அஷ்ரப்பும், கிழக்கில் தமிழர்களும் முஸ்லிங்களும் ஒருவரை ஒருவர் மறுதலித்து வாழமுடியாதென ஜனாப் மன்சூரும் கூறுவனவற்றை ஒன்றாக வைத்து நோக்கும் பொழுதுதான் இந்தக் கருத்திபேதத்தின் 'ஆழ' 'அகலம்' தெரிகின்றது.

சுதந்திரக்கட்சி, யூ. என். பி. ஆகிய கட்சிகளிலுள்ள மற்றைய முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிங்கள் 'தாக்கப்படுவதற்கு' எதிராகக் குரல் கொடுப்பவர்களாக உள்ளனரே தவிர வட–கிழக்கு முஸ்லிங்களின் ஆட்சியமைப்பு நிலை என்ன என்பதை திட்டவட்டமாக எடுத்துக் கூறுவதாகத் தெரியவில்லை.

இந்த விடயம் பற்றி ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் இச் சூழலில் எக்கருத்தும் தெரிவிக்காமலிருப்பது மிகச் சுவாரசியமான ஒரு விடயமாகும்.

இன்று முஸ்லிம் தலைமை எனக் குரல் தருவோர்களில் முக்கியமானவர்கள் எம். எச். முஹம்மது, அஷ்ரப், மன்சூர், ஆகியோரே. அவர்களுள்ளும் ஜனாப் எம். எச். முஹம்மதுவினதும் அஷ்ரப் அவர்களினதும் நிலைப்பாடுகளே முக்கியமானவையாகும்.

## அஷ்ரப்பின் எழுச்சி

ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் இலங்கையின் முதலாவது முஸ்லிம் அரசியல் கட்சியின் ஸ்தாபகர் என்ற பெருமைக்குரியவர். இவர் ஸ்ரீலங்கா முஸ்லிங் காங்கிரசைத் தோற்றுவித்த பொழுது இவரது முக்கிய குறிக்கோளாகக் காணப்பட்டது, இவர், கிழக்கிலங்கை முஸ்லிங்களை கொழும்பு –கண்டி முஸ்லிங்களின் அரசியல் தடத்திலிருந்து விடுவித்து முஸ்லிம் விவசாயிகளினது தேவைகட்குக் குரல் கொடுக்கும் தன்மையேயாகும். யூ. என். பி., எஸ். எல். எவ். பி. என்ற தடத்துக்குள் எல்லாமுஸ்லிம் அரசியல்வாதிகளும் போனதால் வடக்கு – கிழக்கில் வசிக்கும் முஸ்லிங்களின் பிரச்சினைகள் கவனிப்பாரற்றுப் போன, குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிங்களினது காணிகள் சுவீகரிக்கப்பட்டமை எடுத்துப் பேசப்படாதேபோன நிலைமை கண்டு முஸ்லிங்களுக்கு நிலையான ஓர் அரசியல் தளத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவே அஷ்ரப்பின் முயற்சி அப்பொழுது அமைந்தது; நோக்கப்பட்டது.

> வட கிழக்கு முஸ்லிம்களின் நிலைமையும் இலங்கை முஸ்லிம் தலைமையும்: அண்மைக்கால நடவடிக்கைகள் பற்றிய சில அவதானிப்புகள் என்னும் தலைப்பில் யாழ்ப்பாணம் "முரசொலி" யில் வெளியான கட்டுரை மறுபிரசுரமாகிறது!

அந்தக் கட்டத்தில் தமிழ் – முஸ்லிம் நல்லுறவின் அத்தியாவசியத்தை இவர் வற்புறுத்தி வந்தார். இதனால் தமிழர் அரசியற் சக்திகளினால் வரவேற்கப்பட்டார். அப்பொழுது யூ. என். பி., எஸ். எல். எவ். பி முஸ்லிங்களின் வெறுப்புக்கு இவர் ஆளானார்.

அஷ்ரப்பின் எழுச்சி அது கால வரை நிலவிய முஸ்லிம் தலைமைக்குச் சவாலாக அமைந்தது. பாரம்பரியமான முஸ்லிம் தலைமை கொழும்பைத் தளமாகக் கொண்டது.

1956 இல் அத்தலைமைக்குச் சவாலாகக் கிளம்பிய பதியுதீன் முகம்மதுகூட, இறுதியில் கொழும்பையே தளமாகக் கொண்டிருந்தார். தென் மாகாணம், மேல்மாகாணம், மத்தியமாகாணம் என்பன முஸ்லிம் அசைவியக்கத்தின் தளங்களாக அமைந்தன. அந்தவிதியை மீறி விவசாயத்தையும் தமிழ் மூலம் கல்வியையும் தளமாகக் கொண்ட முஸ்லிம் ஜனசக்தியொன்றின் பிரதிநிதியாக அஷ்ரப் மேற்கிளம்பினார்.

முஸ்லிம் காங்கிரசின் எழுகையை வடமத்திய, கிழக்கு, வடக்கு மாகாண முஸ்லிங்கள் வரவேற்றனர்.

மாகாணசபைத் தேர்தலில் அவர் ஈட்டிய வெற்றி அவருக்கு பாராளுமன்றத் தேர்தல் சம்பந்தமாகவும் நிறைந்த தன்நம்பிக்கையை ஏற்படுத்திற்று. பிரேமதாசா அவர்கள் ஜனாதிபதியாவதற்கு இவரின் அரசியல் உதவி நாடப் பெற்றது. புதிய பாராளுமன்றத்

→ 6 ஆம் பக்.

நன்றி - நூலகத்திட்டம்




# ரஞ்சன் படுகொலை - என்-ராம்.

இலங்கையின் தலைநகரின் மையப்பகுதியில் நடந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவின் கொலையானது இலங்கை அரசுக்கு புதிதாக விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றே சொல்ல வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை நடாத்தி வந்தவரும், முடியுமானால் தன்னைக் கொலை செய்யுங்கள் பார்க்கலாம் என்று தனது எதிரிகளை நோக்கி அடிக்கடி சவால் விட்டு வந்தவரும் இலங்கை அரசில் மிகவும் முக்கியமான, மிக அதிகளவு அதிகாரங்களைப் படைத்தவருமாக விளங்கி வந்த ரஞ்சன் விஜேரத்தினவின் படுகொலை இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் நடந்த மிக முக்கியமானதொரு கொலையாகும். அடையாளம் காணமுடியாதளவுக்கு சிதைந்து சின்னாபின்னப்படும் வகையில், தப்புவதற்கான எத்தகைய வாய்ப்பும் இல்லாத விதத்தில் அழிக்கப்பட்ட அவருடன் கூடவே அவரது ஆற்றல் மிக்க மெய்க்காப்பாளர்களும் அப்பாவி பொதுசனங்களும் பலியாகிப் போனார்கள். இந்தக் கொலையானது இலங்கையின் இராணுவ மயப்படுத்தப்பட்ட அரசுக்கு இங்கு ஒரு அரைகுறைத் தீர்வுக்கு இடமில்லை என்று அழுத்திச் சொல்லப்பட்டது போல ஒரு செய்தியாகவே தெரிகிறது.

இதிலே உள்ள சுவையான அம்சம் என்னவென்றால் கொல்லபபடுவதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் தான் கொழும்பிலே பரவலாகக் குண்டுகளை வெடிக்க வைக்க புலிகள் முயன்று வருவதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாயும் பொதுமக்களை அவதானமாக இருக்கும் படியும் இவரது பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது. கடந்த இரண்டாண்டு காலத்தில் பெருமளவில் நடைபெற்று வந்த படுகொலைகளையும் காணாமல் போனதுகளையும் எதிர்த்து அன்னையர் முன்னணியினர் கொழும்பில் ஒழுங்கு செய்திருந்த ஊர்வலத்தை மிரட்டும் நோக்குடனேயே பாதுகாப்பு அமைச்சு இவ்வாறு எச்சரித்திருந்தது என்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம். எப்படியோ அப்போதே புலிகள் தமக்கு அத்தகைய குண்டு வைக்கும் நோக்கம் எதுவும் இல்லையென்று அறிக்கை விட்டிருந்தார்கள்.

சரி அமைச்சர் விஜேரத்தினவை கொன்றவர்கள் யார்? பிரபாகரனின் புலிகளோ தாங்கள் அல்ல என மறுக்கிறார்கள். முன்னாள் யாழ்ப்பாணத்தின் புலிகள் இயக்கத் தளபதி கிட்டுவைப் பொறுத்தளவிலும் கூட இந்தக் கொலையில் விடுதலைப் புலிகளுக்கு சம்பந்தமிருப்பதாகக் கூறப்படுவதை அவர் திட்டவட்டமாக மறுக்கிறார்.

புலிகளைப் பொறுத்தவரை, அவர்கள் தமது ஆரம்பகாலங்களில் தாம் செய்த கொலைகளை பெருமையுடன் உரிமை கோரிக் கொண்ட தென்னவோ உண்மை தான் அப்போதெல்லாம் தமது ராணுவப் பலத்தையோ, ஆயுதப் போராட்டத்தில் தமக்கிருக்கும் ஆர்வத்தையோ மறைக்குமளவுக்கு எந்த அரசியல் ரீதியான முதிர்ச்சியும் இருந்ததில்லை. ஆனால் இன்று தமது கடந்த ஏழாண்டு கால சாதனைகள், அரசியல் முதிர்ச்சி என்பனவற்றின் பின் பொதுமக்கள், அல்லது அரசியல் இலக்குகள் மீதான தமது தாக்குதல்கள்ளை உரிமை கோர வேண்டிய தேவை அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவை இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி - அவற்றின் தன்மையைக் கொண்டே இது புலிகளுடைய நடவடிக்கை தான்! என்று அடித்துச் சொல்லி விடுவார்கள் எவரும். அத்தகைய ஒரு அங்கீகாரம் இப்போது அவர்களுக்கு இருக்கிறது! தமது எதிரிகள் மீதான புலிகளின் தாக்குதல்கள் அவ்வளவுக்கு அழுத்தமான மரண அடிகளாக இருந்து வந்திருக்கிறது!

கொலை செய்யப்பட்ட விஜேரத்தின பற்றிய கிட்டுவின் வார்த்தைகள் மிகவும் அளந்து சொல்லப்பட்ட வார்த்தைகள். அவர் சொன்னார் "ரஞ்சன் விஜேரத்தின இலங்கையின் இனவெறி ஒடுக்குமுறை அமைப்பின் ஒரு குறியீடு. நூற்றுக் கணக்கில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு யுத்தத்தினை நடாத்தி வருகின்ற இவர் இதன் விளைவுகளைப் பற்றிக் காட்டிக் கொள்ளாமலே பேச்சு வார்த்தையை மறுத்து வருகிறார். அப்பாவி மக்களது கொலைகளுக்கு இவர் தான் பொறுப்பாளி.....! லண்டனில் இருந்து வெளியிட்ட தனது பச்சை இரத்தம் கக்குகின்ற ஆனால் மிகச் சரியானதாக அமைந்த தனது அறிக்கையில் அவர் மேலும் சொன்னார், "இவரது மரணமானது தமிழ் மக்களுக்கு ஒரு நிம்மதிப் பெருமூச்சை விட வைத்திருக்கும்" அவர் அத்துடன் நிறுத்தவில்லை. இன்னும் கொஞ்சம் மேலே போய் நிலைமையை மேலும் சிக்கலாக்கும் விதத்தில் சொன்னார், "விஜேரத்தினவுக்கு கொழும்பில் நிறைய எதிரிகள் இருந்தார்கள்."

இலங்கையின் இனப்பிரச்சினையின் இயக்க சக்திகள், அவற்றின் போக்குகள் என்பன குறித்தும், ஆயுதமேந்திய போராட்டக்காரர்களது கருத்தியல் குறித்தும் ஓரளவ்வாவது அனுபவமுள்ளவர்கள் நிச்சயமாக இந்தச் சக்திவாய்ந்த குண்டு வெடிப்புக்குப் பின்னாலிருந்தவர்கள் யார் என்பது ஓரிரு நாட்களில் தெரியவரப் போவதில்லை என அடித்துச் சொல்லி விடுவார்கள்! பொலிஸாரின் விசாரணைகள் குறிப்பாக இது மாதிரியான வன்முறைகள் பொதுவாகவே தென்னாசியாவில் இன்னும் வளர் நிலையிலேயே உள்ளன. இவ்வரசுகளது புலன் விசாரணைக்கான சக்திகளுக்கு அப்பாற்பட்டவையாகவே இத்தகைய வன்முறைகள் எப்போதும் இருக்கின்றன. அனுராதபுரத்தில் 1985 இல் நிகழ்ந்த படு கொலைகள், 1987 இல் நடந்த பெற்றா குண்டு வெடிப்பு மற்றும் பல்வேறு அடுத்தடுத்து நடந்த சம்பவங்களும் அவை குறித்த விசாரணைகளும் இந்நிலைமையை மேலும் தெளிவாகக் காட்டுகின்றன.

விஜேரத்தினவை கொலை செய்தது யார்? என்ற கேள்விக்கான பதில் சாரத்தில் இத்தகைய அதி சக்தி வாய்ந்த அரசியல் இலக்குகளைத் தாக்கும் இராணுவ ஆற்றலும் அவற்றினை அடிக்கடி நடாத்தும் சக்தியும் கொண்டவர்களை ஒழுங்கு படுத்தி அவர்களது அரசியல் இராணுவ நிலை குறித்த நிகழ்வுகளின் அடிப்படையிலேயே அதுவும் ஊகிக்க மட்டுமே முடியும். நிலவும் நிலைமை, நோக்கம், இயல்பு என்பவற்றைப் பார்த்தால் J.V.P. யோ. L.T.T.E யோ இருவருமே இதைச் செய்திருக்கக் கூடியவர்கள் தான். அதே வேளை அண்மைக் காலங்களில் அன்னையர் முன்னணியினால் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்ட இரண்டாண்டு கால (1988 - 1990) இடை வெளிக்குள் 60,000 பேர் காணாமல் போனதற்குக் காரணமான அரச தரப்பு கொலைப் படைகளைக் கூட ஊகிக்காமல் இருக்க முடியாது. நாடகாசிரியரும், பத்திரிகையாளருமாகிய ரிச்சர்ட் டி சொய்சா கொலை இக் கொலைப் படைகளது நடவடிக்கைகளுக்கு நல்ல உதாரணமாகும்!.

மிகவும் இறுக்கம் குறைந்த இராணுவ, அரசியல் ரீதிகளில் பலவீனமான ஒரு அமைப்பான J.V.P. யை அழிப்பதில் ஈட்டி முனையாக செயல்பட்டவர் ரஞ்சன் விஜேரட்னவே கடந்த 1989 காலத்து J.V.P. யின் நடவடிக்கைகளை அவதானித்த எவரும் இந்த மாதிரியான செய்நேர்த்தி மிக்கதொரு இராணுவத் தாக்குதலை செய்திருக்க முடியாது என்று இலகுவாகவே கூறிவிடலாம்.

மறுபுறத்தில் தமிழர்களின் பிரச்சினையானது மிகவும் ஆழமானதாகவும் ஜே.வி.பியுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேரெதிரான விதத்தில் அரச அடக்கு முறைகளுக்கு எதிராக எதையாவது செய்யக் கூடியதாக. சக்தி மிக்க விடுதலைப் புலிகள் இருப்பதுவும் கவனத்திற்குரியது. உண்மையில் வடமராட்சியில் சக்திமிக்க அதன் பிரதேசங்களையும் பிற இடங்களையும் விஜேரத்தினவின் படைகள் பிடித்த போதும் புலிகளால் தொடர்ந்து தமது தாக்குதலை நடத்தக் கூடியதாக இருக்கதான் செய்கிறது. இராணுவ கவனிப்புக்குட்பட்ட, குண்டு வீச்சு வாய்ப்புகள் உள்ள சில இடங்களை தவிர்த்தால் புலிகளுக்கு சுதந்திரமாக நடமாட சுதந்திரம் மிக்க மிகப் பெரிய பிரதேசம் இன்னமும் இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதில் இந்தியாவுக்குள்ள பங்கை எதிர்த்து 14 மாதகாலமாக விஜேரத்தினவும் அவரது சகபாடிகளும் நடாத்திய "பேச்சுவார்த்தை" கடந்த ஆண்டு ஜுன் 11 இல் முறிந்தபோது அவர்கள் அப்போது நிலவிய இராணுவ அரசியல் நிலைமைகளை தவறாக எடை போட்டனர். J.V.P. யை வென்ற செருக்கு அவர்களுக்கு தலைக்கனத்தைக் கொடுத்திருந்தது. இலங்கையின் சனாதிபதியும் வேறு சிலரும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க விரும்பிய போதும் அதை எதிர்த்து நின்றவர் ரஞ்சன் விஜேரத்தினவே என்ற கிட்டுவின் கருத்து இங்கு கவனிக்கப்பட வேண்டும். நடைமுறை அனுபவமே அற்ற ஒருவர் யூ.என்.பியின் சக்திமிக்க ஒருவராக் ஆக்கப்பட்டது இலங்கையின் சமீப கால அரசியலில் மிகவும் ஆச்சரியமூட்டுகிற ஒரு விடயமாகும். தொடர்பு சாதனங்கள் மூலம் தன்னை ஒரு கடும் போக்காளனாகக் காட்டிக் கொள்வதன் மூலம் இதை அவர் மிகவும் தெளிவாக்கினார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முந்திய காலப்பகுதியில் இராணுவத்தின் விருப்புக்குரியவராக இருந்தவர் லலித் அத்துலத் முதலி. முன்னைய பாதுகாப்பு அமைச்சரான இவர் மெச்சத்தக்க அரசியல் இராஜந்திர திறமைகளை கொண்டவர். புலிகளுக்கெதிரான யுத்தத்தை நடத்தும் போது தீவிரமாகவும், ஏனைய வேலைகளில் இயல்பான வளைந்து கொடுக்கக்கூடிய ஒருவராகவும் இருந்தார், இந்த மாதிரியான சிறப்புகள் ரஞ்சனிடம் கிடையாது.

1989 இல் நான் (ரஞ்சனை) அவரை சந்தித்தேன். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் வீட்டில் நடந்த மதிய உணவின் போது எனக்கு அவருடன் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. அமைதியாகப் பேசுகின்ற, உணர்வுகளை வெளிப்படுத்துவதில் கூச்ச சுபாவமுற்ற ஒருவராக அவர் காணப்பட்டார். அவர் அரசியல்வாதிக்குரிய இயல்புகளற்ற, அரசியற் சாதுரியமற்ற ஒருவராக அங்கிருந்தவர்களுடன் ஒப்பிடுகையில் - மிகத் தெளிவாகவே இனங்காணப்படக் கூடியவராக இருந்தார். இது அவரும் அவரது இராணுவ இயந்திரமும் J.V.P. யை அழிப்பதில் வெற்றி பெறுவதற்கு முன்பாக நடந்தது. அதன் பிறகு அவர் இனப்பிரச்சினை தொடர்பாகவும் அது சம்பந்தமான இந்தியாவின் பங்கு பற்றியும் தொடர்ச்சியாக ஆத்திரமூட்டும் கருத்துக்கள் பலவற்றைத் தெரிவித்து வந்தார். இந்திய இலங்கை உறவில் தாக்கத்தை ஏற்படுத்தவும் தமிழ் நாட்டில் ஒரு சிறிய அளவாவது அதன் அரசியல் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தவும் காரணமாக இருந்தார். உதராணமாக தமிழ்நாடு அரசு பாக்குநீரிணை மீதாக புலிகள் தமது போக்குவரத்தை மேற்கொள்வதைத் தடுப்பதற்கு எடுத்த நடவடிக்கைகளையிட்டு தான் திருப்தி அடைவதாக சனவரி 17ம் திகதி அறிவித்தார். ஆனால் ஒரு சந்தர்ப்பவாதி போல, அதே தமிழ் நாட்டு அரசை சந்திரசேகர் கோஷ்டியினர் கவிழ்ந்த போது வரவேற்கவும் செய்தார். ("மத்திய அரசு ஒப்பந்தத்தின்படி செயற்படுவதையிட்டு நாம் திருப்திப் படுகிறோம்") - என்பதே இது தொடர்பான அவரது அறிவிப்பு!).

ரஞ்சன் விஜேரத்ன ஒரு தோட்ட முதலாளி, 'சட்டமும் ஒழுங்கும்' - அதன் சமூக அரசியல் தத்துவ முரண்பாடுகளுக்கு அப்பால் சரியாக இறுக்கமாக இருக்க வேண்டும் எனக் கருதுபவர்' இனவாதி' என்ற அவப்பெயரை அவர் ஒரு போதும் பெற்றதில்லை. ஆயினும் 1991ற்கு முன்பாக ஆசியப் பிராந்திய மனித உரிமை மீறல் விவகார

இயக்கத்துக்கு அப்பால் காணப்படும் பரந்துபட்ட மக்களின் - இச் சந்தர்ப்பத்தில் பெண்களின்-நலனைக் கருத்தில் கொள்ளாமல் நடாத்தப்பட்டு வரும் அரசியலுக்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டாக அமைகிறது.

அடுத்ததாக, விடுதலை இயக்கங்கள் பெண்கள் தொடர்பாக எத்தகைய நோக்கினைக் கொண்டிருந்தார்கள் எனக் கவனிப்போம். ஆரம்ப காலங்களில் 'பெண்களை எடுத்தால் பிரச்சினை' என்ற கருத்தே பரவலாக நிலவியது. மணியந்தோட்டத்தில் பெண் போராளிகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட போது இக்கருத்து மேலும் வலுப்பெற்றது.

"ஒரு காலத்தில் பெண்கள் தீயவர்களாகக் கருதப்பட்டார்கள். ஏனெனில், பெண்களால் ஆண்கள் தமது இலட்சியத்தை இழந்து விடுவார்கள். இதனுல் பெண்களுடன் தொடர்பு வைத்திருக்கக் கூடாது என L.T.T.E. யினுல் அதன் இயக்க உறுப்பினர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது." (முறிந்த பனை, பக் 327). இந் நடைமுறை பிரபாகரனின் திருமணத்துடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

தற்போது L.T.T.E ஐப் பொறுத்த வரையில் பெண்கள் தொடர்பாக இரண்டு கருத்துக்கள் தலையோங்கக் காணப்படுகிறது. எல்லோரும் ஆயுதம் ஏந்தித் தங்களுடன் இணைந்து போராட வேண்டும் அல்லது இப்போராட்டத்திற்கு புதல்வர்களைப் (புதல்விகளை மறந்து விட்டார்கள் போலும்!) பெற்றுத்தர வேண்டும்.

L.T.T.E. ஐப் பொறுத்தவரையில் தலைமைப்பீட உத்தரவுகளை அப்படியே ஏற்று நடைமுறைப் படுத்தும், மத்தியமயப்படுத்தப் பட்ட (Centralised) இராணுவ அமைப்பாகும். இதன் கொள்கைகளையும் நடைமுறைகளையும் விமர்சிக்கவோ கேள்வி கேட்கவோ இயக்கத்திற்குள்ளோ அல்லது வெளியிலோ யாருக்கும் உரிமை கிடையாது. இவ்வகையான ஒரு சூழ்நிலை பெண்ணிலை வாதம் பற்றிய விவாதத்தை இயக்கத்திற்குள் நிகழ்த்த எவ்வகையிலும் உதவாது. பெண்ணிலை வாதம் எதனையும் கேள்விகளுக்கு அப்பாற்பட்டதாக ஏற்றுக் கொள்வதில்லை. மாருக, எல்லாவித அமைப்புக்களையும், நடைமுறைகளையும், கொள்கைகளையும், சித்தாந்தங்களையும் ஏனைய எல்லா அம்சங்களையும் கேள்விகளுக்கு உட்படுத்தி விடைகாண முனைகிறது. எமது சமுதாயம் ஒரு தந்தைவழிச் சமுதாயம். எனவே இச்சமுதாயத்தின் அனேக அமைப்புக்களும் நடைமுறைகளும் பெண்களுக்குப் பாதகமானதாகவே அமைகிறது. இதனை நாம் நன்கு உணர்ந்து கொண்டோமாயின் எமது சமுதாயத்தில் நாம் எதனையும் கேள்விக்கு அப்பாற்பட்டதாகக் கருதமாட்டோம்.

"நாம் இப்போது கூறுவதில்லை: எங்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்புகளை, உரிமைகளைத் தாருங்கள். உங்களுக்குச் சமமானவர்கள் என்ருே அல்லது உங்களுடன் இன்னும் அதிகமாகப் போட்டியிட சந்தர்ப்பம் தாருங்கள் என்றோ கூட. ஆனுல் அதைவிட நாம் முழுக் கேள்விகளையும் மீள ஆராய்ந்து பார்ப்போம், எல்லாக் கேள்விக ளையுமே. ஒன்றையும்


க்கை காணப்படுகிறது.

"இயக்கத்துக்குள் பெண்கள் பிரச்சினை தொடர்பாக அதிக குழப்பம் இருக்கிறது. எனினும் இறுதியில் அவர்கள் (சுதந்திரப் பறவைகள்) தமது விவாதத்தை முடிக்கையில் தமக்கு தங்கள் தலைவர் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது எனக் கூறிஞர்கள்." (முறிந்த பனை, பக் 328).

எம்து சமுதாயத்தைப் பொறுத்த வரையில் அது பெண்கள் இயக்கங்களில் சேர்ந்தமையை/சேர்கின்றமையை சிறிதளவும் ஆதரிக்கவில்லை. E.P.R.L.F போன்ற இயக்கங்கள் L.T.T.E. யிருல் கலைக்கப்பட்ட போது கூட ' இந்தப் பெண்கள் தான் இயக்கத்தைக் கெடுத்ததுகள்' என்ற கருத்தே பரவலாக நிலவியதை நாம் மறுக்க முடியாது.

ஓர் ஆண் போராளி இயக்கத்தைவிட்டு விலகி, தன் வீடு திரும்பும் போது மிகுந்த மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும் வரவேற்கப்படுகிருன். அவனது உயிருக்கு ஆபத்து நிகழலாம் என்று எண்ணப்படும் போதோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அவனை எப்படியாவது வெளிநாட்டுக்கு அனுப்பிவிடவும் பெற்ருர் தவறுவதில்லை. ஆனுல் இயக்கத்தைவிட்டு வெளியேறும் பெண் போராளிகளில் பெரும்பான்மையானேரைப் பொறுத்தவரையில் அவர்கள் கதை வேருக உள்ளது.

அனேகமான சந்தர்ப்பங்களில் வீட்டை விட்டு வெளியேறிய பெண்ணை அவள் வீட்டார் ஏற்கும்






# தேசியவிடுதலைப் போராட்டமும் பெண்ணிலைவாதமும்

"இழப்புக்களிலிருந்து
உயிர்பெற்றெழும்
தேசத்திற்காக—தாய்
நிலம் பிளந்து
இன்னும் புதல்வர்களைத்
தா அம்மா......"

மேற்படி கவிதை வரிகள் மறுமலர்ச்சிக் கழகத்தின் (L.T.T.E. யின் யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு ) சஞ்சிகையான தளிரில் அட்டைப்பட கவிதையாக 1985ம் ஆண்டளவில் முதன் முறையாகப் பிரசுரிக்கப்பட்டது. தொடர்ந்தும் L.T.T.E. சார்ந்த சஞ்சிகைகளில் இது வெளிவந்த வண்ணம் இருக்கிறது.

தங்களுடன் இணைந்து போராட வேண்டும் அல்லது வெறுமனே சடங்களாக (பெண்களைப் பொறுத்த வரையில் பிள்ளைகள் பெறும் இயந்திரங்களாக) இருக்க வேண்டும் என்ற L.T.T.E. யின் நிலைப்பாடு, போராட்டம் தொடங்கிய நாளில் இருந்து இன்று வரைக்கும் அவர்கள் கொண்டுள்ள கண்ணோட்டத்துடன் உடன்படுவதாகவே உள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் கூட யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் யோகி பின்வருமாறு பேசினுர். " 40 வயதிற்குக் கீழ்ப் பட்டவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டும். 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் விமர்சனங்களை நிற்பாட்டி விட்டு, உங்களுடைய வாய்களை மூடிவைத்துக் கொள்ள வேண்டும்."

நாம் முடிந்த முடிவாக எடுத்துக் கொ..ாக் கூடாது. நாம் எம்மை..யும், எமது பாத்திரத்தையும் (role), எமது தோற்றத்தையும் மட்டும் மீள வரையறுத்துக் கொண்டால் போதாது, நாம் எவ்வகையான சமூகத்தில் வாழ விரும்புகிறோம் என்பதையும் வரையறுக்க வேண்டும் ....." (மனுஷி, தை 1979).

மேற்கூறப்பட்ட விடயம் நமது பெண் போராளிகள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். நாம் நமது பாத்திரங்களையும் தோற்றத்தையும் (ஆயுதம் ஏந்தி 'நாட்டைக் காப்பதன்' மூலம் ) மட்டும் மீள வரையறுத்துக் கொள்வதன் மூலம் பெண் இனத்துக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை. நாம் வாழவிரும்பும் சமுதாயத்தையும் நாமே வரையறுக்கும் போதுதான் அது எம் விடிவிற்கு வழிகோலுவதாக அமையும். இவ் அடிப்படை உண்மையை உணரும் வரை பெண் போராளிகள் யாரும் வீணே பாவிக்கப்படுவார்கள்.

" சோசலிசம் வந்தால் பெண்கள் பிரச்சினை எல்லாம் தீர்ந்து விடும்" என்ற மரபுரீதியான மார்க்சிஸ்டுகளின் வாய்ப்பாட்டைப் போலவே, "ஈழம் வந்தால் பெண்கள் பிரச்சினை எல்லாம் தீர்ந்து விடும்" என்ற நம்பிக்கை பல பெண் போராளிகளிடம் காணப்படுகிறது. இன்னும் சிலரிடம், எமது தலைவரே எல்லாவற்றையும் தீர்த்து வைப்பார் என்ற நம்பி

நிலையில் இல்லை. சமுதாயமும் இவர்களைத் தீண்டத்தகாதவர்களாகவே நோக்குகின்றது. இது எதனைக் காட்டுகிறது? பெண்கள் தொடர்பாக நமது சமுதாயம் கொண்டுள்ள பக்கச்சார்பினையே புலப்படுத்துகிறது. அதாவது, பெண்கள் வீட்டைவிட்டு வெளிக்கிட்டால் போதும் அவர்கள் 'கறை படிந்தவர்கள்' என்ற கருத்தே நமது சமூகத்தில் இன்னும் நிலவுகிறது. (குறிப்பு: நான் 'கற்பு,' 'கறை படிந்தவர்கள்' போன்ற கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

## பாஞ்சாலி

சமுதாயத்தில் நிலவும் கருத்துக்களை ஆராய்வதற்காகவே இப்பதங்களைக் கையாள்கிறேன்). மேலும் 'கற்புத்தொடர்பாக நமது சமுதாயம் கொண்டுள்ள இரட்டை நிலைப்பாடு அதாவது ஆண்களுக்கு ஒரு விதி, பெண்களுக்கு ஒரு விதி என்ற நிலை – இன்னும் எள்ளளவு கூட மாறவில்லை. என்னைப் பொறுத்தவரையில் பெண் விடுதலையின் அடிப்படை கற்புப் பற்றியதுதான். ஏனெனில் ஒரு பெண் சுதந்திரமாகச் சம்பாதிக்கலாம் அல்லது காற்சட்டை போட்டு துவக்கு ஏந்தி போராடலாம். ஆனுல் கற்பு எனும் கோட்பாடு அவளைத் தொடர்ந்து அடிமைப்படுத்தலாம்.

(தொடரும்)

குருதியில் சிவந்த கோர உதடுகள்........
நர மாமிசம் தொங்கும் நீண்ட பற்கள்.....
சிசுக்களை இரண்டாய் கிழித்த கைகள்...

மானுட விழுமியம் மீது
இரத்தக் கோடுகள் வரைந்தாள்
ஈழக் காளி......

துயர அழுகையின் இறுதிமுறையீடுகளும்
'பாங்கொலி' இழந்த பள்ளி வாசல்களும்...

ஈழமண்ணில்
ஆறு காலமும்
உயர் கோபுரங்களில்
மணி ஒலிக்கிறது.....

மறுக்கப்பட்ட புன்னகைகளை
மனிதரிடத்து இருந்து பிடுங்கி
பெருமானுக்கு சாத்துங்கள்........

எங்களது நிலத்தில்
எங்களுக்குள்ள வாழும் உரிமைக்காக
நாங்கள் போராடுவது பற்றி
என்ன சொல்லப் போகிறீர்கள்! ! !

நான் சொல்கிறேன்:
ஈழத்தாயே
உனது ஆத்மாவை பிடுங்கி
அங்காடியில் விற்கிறாய்......
'எழிலகத்'திலும்
'தமிழருவி'யிலும் மலிவு விலையில்.......
மானுட விழுமியத்தில் இருந்து
வடிகிற ரத்தத்தில்
விளைந்த
இயல் மாவும
இசைத்தட்டும்........

வடக்கிலும் தெற்கிலும்
யுத்தத்தீயில்
கொதிக்கிற
இனவாதக் குருதியில்
அவித்தெடுங்கள்
மானுட ஆத்மாவை!

எல்லாத் திரைகளையும்
எல்லாத்தடைகளையும்
மீறி மானுடராக எழுவோம்......

"எங்கள் கரங்களையும்
உங்கள் கரங்களையும்
இறுகப் பிணைப்பதற்கு
இரத்தம் தேவை என்று
நீங்கள் நினைக்கிறீர்களா.....?

-பாவலன்-

'வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது புலிகளால் பறிக்கப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படும் நிலையங்கள்'

நன்றி - நூலகத்திட்டம்

இன்று தமிழர்களையும் ஈற்றில் இந்நாட்டின் முழு மக்களையும் ஒரு நிச்சயமற்ற எதிர்காலத்துடன் எதிர் நோக்கும் பிரச்சினையானது சகல வரைவிலக்கணங்களையும் நிராகரிப்பதாக தோன்றுகின்றது. தமிழர்கள் பெருமளவிற்குத் தம்முடைய ஆன்மீக, அறிவியல் ரீதியான உடைமைகளை (Bearings) இழந்துள்ளதோடு அவர்களின் உயிர்வாழ்வதற்கான சாத்தியக் கூறே தராசுத் தட்டில் காணப்படுகிறது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் பலவந்தமாக வேருடன் பிடுங்கப்படுதல், கொள்ளை அடிக்கப்படுதல், பின் துரத்தப்படுதலும், அவர்களுக்கு எதிராக தூண்டி வளர்க்கப்படும் மனப்பான்மைகளும், ஆதிக்கம் செலுத்தும் தமிழ்த் தத்துவார்த்தத்தை மிகவும் அவமானகரமான ஒரு நிலையில் வைத்துள்ளது. ஒரு சிறுபான்மையினராய் இருத்தலில் உள்ள பாதிப்புகளை உணரத் தவறியதன் மூலம் அவர்கள் தங்கள் சொந்த வரலாற்றையே மறந்து போயுள்ளனர். ஒரு சமூகம் என்ற ரீதியில் தொடர்ச்சியான பல அனுகூலங்களைப் பெற்றுவந்த முஸ்லிம்கள் புலிகளின் கொடிய சகிப்புதன்மையின்மையாலும் அரசின் தந்திரங்களாலும் பல பின்னடைவுகளை அடைந்துள்ளனர். தற்போது இவர்கள் ஒரு வன்முறைக் கலாசாரத்தினுள் உள்ளெடுக்கப்பட்டுக் கொண்டு வரும் அதேவேளை, அமைதியும், பிரதிபலிப்புத்தன்மையும் உடைய முஸ்லிம்களின் குரல்கள் புறக்கணித்தொதுக்கப்பட்டு வருகின்றன. எல்லைப்புறங்களில் கொல்லப்பட்டு வரும் சிங்களக் குடியானவர்கள் தவிர இவ் அரசியற் கலாசாரத்தின் பொதுவாக உள்ள பிரிந்தழியும் தன்மையின் உள்ளடக்கமாக, சிங்களவர்களை அழித்தொழிக்கும் அழுத்தத்தை தெற்கில் தொடரும் நிகழ்வுகளால் பற்றிஎரியும் உடல்களின் மூலம் அறிய முடிகின்றது.

இந்நாட்டில் அமைதியை விரும்புபவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது உள்ளமை தவிர பிரச்சினை இன்னது என அடையாளம் காணவே முடியாதுள்ளமை தெளிவாகின்றது. கனேடிய வெளிவிவகார காரியதரிசி Joe Clark ஆல் அண்மையில் வெளியிடப்பட்ட 73 பத்திரிகை அறிக்கை இந்நிலையைத் தெளிவுபடுத்துகின்றது. இந்நாட்டின் மனித உரிமை மீறல் சம்பந்தமாக கரிசனையை வெளிப்படுத்தும் ஒரு "சமப்படுத்தப்பட்ட" அறிக்கையில் அவர் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் வடக்கு கிழக்கு வாழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் பொருத்தமான தொரு வழியாக இருபகுதிகளையும் பேச்சு வார்த்தையை மேற்கொள்ளும்படி கோரியுள்ளார். இதேபோன்ற கருத்துக்கள் பிரித்தானிய பிரதம மந்திரியால் அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையிலும், இந்திய உயர்ஸ்தானிகரின் ஒரு கோரிக்கையிலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளன.

மறுபுறத்தில் தனிப்பட்டமுறையில் பேசும் போது யாவரும் ஒரு இழப்பை உணர்வதாக பொதுவாக ஒத்துக்கொள்ளப்படுகின்றது. பெரும்பாலானோர் ஒரு பேச்சுவார்த்தை மூலமான தீர்விக்கு மிகவும் அரிதான வாய்ப்பே உள்ளது என்று உள்ளூர உணருகின்றனர். போர் வெடித்ததை அடுத்து அரசின் இராணுவ, மற்றும் நிருவாக இயந்திரத்தின் இயல்பான, சிலவேளை வெளிக்காட்டப்படாத முனைப்பானது, கிழக்கு மாகாணத்தில் வரலாற்று ரீதியான தமிழ்க் கூட்டமைப்புகளையும் (associations), பிரசன்னத்தையும் இல்லாதொழிப்பதை துரிதப்படுத்தும் முகமாகவே இருக்கின்றது. இரக்கமற்ற இத்தன்மை 6000 இற்கும் அதிகமான தமிழ்க் குடிமக்களுக்கு சாவை, சண்டையின் காரணமாவேகவல்லாது குண்டுவீச்சுகளினுலும், படுகொலைகளினாலும் கொண்டு வந்துள்ளது.

மறுபுறத்தில் புலிகளோ கைதிகளாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பொலிசாரையும், சுமார் 700 அளவிலான முஸ்லிம்களையும் படுகொலை செய்ததன் மூலம் மனிதத்தன்மையின் சீரழிவிற்கு உதவியதோடு மனிதத் தொடர்புகள் மற்றும் புரிந்துணர்வுக்கான சாத்தியக்கூறுகளை சிதைத்துள்ளனர்.

கடந்த 4 மாதங்களின் நிகழ்வுகள் நாம் ஒரு பேச்சுவார்த்தை மூலமான தீர்வை அடைவதற்கு இரு முக்கிய தடைகளை ஏற்படுத்தியுள்ளன. ஒன்று கிழக்கில் தமிழ்க் கோரிக்கைகளை நிராகரிக்கும் அரசாங்கத்தின் முயற்சியாக அங்குள்ள தமிழ்ச் சனத்தொகைக்கு மீட்க முடியாதவகையில் அழிவு, இடப்பெயர்ச்சி என்பவற்றை ஏற்படுத்தியமையை அரசின் செல்வாக்கு மிக்க பகுதிகளும், பத்திரிகைகளும் ஆதரித்திருப்பினும் இதன் விளைவுகள் தமிழர் கருத்துகளுக்கு ஒருபோதும் ஏற்புடையதாகவோ அல்லது அவர்களிடத்தில் நம்பிக்கையைக் கட்டி வளர்க்க உதவுவதாகவோ அமையாது.

மற்றயது LTTE இன் தன்மை, அதன் இயல்பான பொருந்தப்பாடுகள் இப்போரை வீழ்படிவித்தது மட்டுமன்றி அதன் இயல்புகளையிட்டு பிரசித்தம் பெற்ற ஆவேசமடைந்த சிறீலங்கப்படைகளின் முன் எதிர்ப்புத்தெரிவிக்கக்கூடிய துணிச்சலோ, ஆற்றலோ அற்றநிலையில் தமிழ்மக்களை கணக்காக விட்டுவிட்டமையாகும்.

மிகமுக்கியமாக பேச்சுவார்த்தைகளானது, அரசியலமைப்பு மாற்றங்கள் பற்றிய பேச்சுக்கள், தேர்தல்கள், ஒருமைப்பாடான நிலைமைகள், மேலும் சில குறையுணர்வுகளை வெளிப்படுத்தல் என்பவற்றைக் குறித்தும். இவை, தமிழ் மக்களின் நலனிற்காக உணர்வும், அர்ப்பணிப்பும் கொண்ட நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள், T.N.A. இல் பலவந்தமாக சேர்க்கப்பட்டடோர், சாதாரண குடிமக்கள், அறிவு ஜீவிகள் என்போரின் விபரீதமரணங்களால் குறிக்கப்பட்ட புலிகளின் பிரதிநித்துவ உரிமையை தட்டிக்கேட்பதைக் குறிக்கும் வெளிப்டையான தன்மை பற்றிய எந்த அறிகுறியும் புலிகளை உடனடியாக பதட்டமடையச்செய்யும். இதற்கு நியாயமில்லாலுமில்லை. இவ்வாண்டின் (1990) தை மாதம் முதல் ஆனி மாதம் வரை புலிகளிற்கான ஆதரவு என்று அழைக்கப்பட்ட வெறும் மன எழுச்சிகளில் ஒரு குறைவு விளைந்துள்ளது. 1987 ஐப்பசி இல் இருந்தது போன்றே நிச்சயமாக இந்த மாற்றமானது மீண்டும் விரோதம் வெடிப்பதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்திருக்கும். (எமது 4ம், 5ம், விசேடமாக 3ம் அறிக்கை என்பவற்றை பார்க்கவும்).

இக் குறித்த மாற்றமானது அரசின் மனநிலைக்கு எவ்வாறு பலமும், உறுதியும் அளித்தது என்பதை, மக்கள்பற்றிய கரிசனையை தம் மனக்கிளர்ச்சிகளுடன் சேர்க்காத LTTE இன் ஆதரவாளர்களின் கருத்துப்படி நாம் ஆராய வேண்டியது இன்றியமையாதது இம் மாற்றநிலையைப் புரிந்துகொள்வது அவசியமானதொன்றுகும். ஏனெனில் ஒரு தீர்வை நாடும் போது நாம் தனிப்பட்டவர்கள் மட்டத்தில் மிக நியாயமான தாக்கப்படும் உணர்வுகளுக்கு அப்பால் இனரீதியான உணர்வுகட்கு அப்பால் போய் இந்த நிகழ்ச்சிப்போக்கானது எம் எல்லோரையும் பயமுறுத்தும் ஒரு தேசிய கொடுமையாக பார்க்க வேண்டும். இம் மாற்றநிலையின் வெற்றியின் தாக்கமானது இந்த நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பல இயக்கங்களைக் கூட பாதிக்கக் கூடியது.

தனிபட்டவர்கள் மட்டத்தில் நியாயமானதாகத் தோன்றும் உணர்வுகளைப்பற்றி நாம் கூறினோம், ஏனெனில் அரசியற் கலாச்சாரத்தின் தற்போதைய நிலையில், பலசாதாரண சிங்களவர்கள், சிப்பாய்கள், அதிகாரிகள் என்போர் அரசாங்கமானது மிக நியாமாக இருந்துள்ளதாகவும், இந்த வெளிப்பாடுகள், நம்பிக்கை, பொறுமை என்பன LTTE இனரால் மிகவும் பண்பாடற்ற முறையிலும் கீழ்த்தரமாகவும் நிராகரிக்கப்பட்தாகவுமே உணருகின்றனர். LTTE இனரிற்கும், பிரேமதாசாவிற்கும் இடையில் 14 மாதங்களாக நிகழ்ந்த தேனிலவின் போது அரசாங்கமானது புலிகளுக்கு இராணுவ, தளபாட மற்றும் இந்திய இராணுவத்தையும் அதன் கூட்டாளிகளையும் வடக்கு கிழக்கில் ஆதிக்கம் செலுத்தும் சக்தி என்ற நிலையிலிருந்து இடம்பெயர்க்க தேவையான இராஜதந்திர உதவி என்பனவற்றை வழங்கியது. ஜூன் வரையான மாதங்களில் இலங்கை இராணுவமும் புலிகளின் பல ஆத்திரமூட்டல்களையிட்டு ஒரு வளமைக்குமாறுன பொறுமையைக் கடைப்பித்தனர். மறுபக்கத்தைப் பற்றிய பேச்சு எடுபடவில்லை. புலிகளுக்கு உதவுவதன் மூலம் அரசானது தமிழ் மக்களுக்கு உதவியது என்ற கருத்தைப் பேணுவது கடினமாக இருக்கின்றது. TAN இல் வலிந்து சேர்க்கப்பட்டோர் உட்பட, தனிப்பட்டவர்கள், மற்றும் எதிர்ப்பு சார்புடைய அகதிகள் ஆகியோரைக் கொலைசெய்வதில் அரசானது புலிகளுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சேர்ந்து இத்தேனிலவுக் காலக்கட்டத்தில் ஒரு சதியில் ஈடுபட்டது. மேலும் வடக்கிழக்கானது ஒப்பிட முடியாதவகையில் அடக்கு முறையை ஒரு அங்கமாகக் கொண்ட ஒரு தர்பாரின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்தப் பக்கத்தைப் பற்றி அறியாத நிலையிலும், நன்கு பிரசாரம் செய்யப்பட்ட புலிகளிடமான அரசின் தயாளகுணத்தை மட்டும் தமிழர்கள் சம்மந்தமாக அடையாளம் காணப்பட்டமையின் தாக்கம் பொலிஸார் படுகொலைசெய்யப்பட்டதை அடுத்து தமிழ்ர்களுக்கு எதிரான ஆத்திர உணர்வாக இயல்பாகவே உருவாகியது. இந்தவகையில் நோக்கியவர்களுக்கு குண்டு வீச்சுகளாலும்,

# இன்றைய நிலை

யாழ்ப்பாணம் -
மனித உரிமைகளு...
பல்கலைக் கழக...

மனித உரிமைகட்கான ...
ஆசிரியர் குழு இலங்...
விடப்பட்டுள்ள மனித ...
பாரபட்சமற்ற முறையி...
நிறுவனம்.

சர்வதேச ரீதியாக ம...
இயங்கி வரும் பல்வே...
தொடர்பு கொண்டு இய...

இது வரை ஆறு அறிக்...
ள்ளது. இதனது ஆறாவது...
அரசியல்" என்ற தலை...
தாகும்.

இவ்வறிக்கைகளில் இல...
ராணுவம், தமிழ்ப் போ...
சகல தரப்பினரதும் ம...
பாரபட்சமற்ற முறையி...
பட்டுள்ளன.

இதனால் எல்லோரு...
வெறுப்பிற்கும் ஆளா...
உரிமைகட்கான பல்கல...
குழு.

இவ்வாறிருப்பினும் ஒவ்...
தமக்கு சாதகமான மு...
களிலிருந்து விடயங்க...
படுத்தி வந்ததும் இங்கு...
ஒன்றாகும். உதாரணமா...
புலிகள் பற்றிய விடய...
இந்திய அரசு மற்றைய ...
பற்றிய விடயங்களை ...
கேற்றவாறு பயன் டுத்...

அண்மையிலும் ஏரிக்க...
Sunday Observer ...
வெளியிட்டிருந்தது. வா...
U.T.H.R இன் ஆறாவது...
வின் அரசியலில்' ...ந்து...
தரப்படுகின்றன யார் ச...

# ஏன் எழுதுவது

சிறுபான்மை பிரச்சினைகளும் அது சார்பான இயக்கங்களும் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு வடிவங்கள் எடுத்துள்ளன. இலங்கையில் சிறுபான்மை இனங்களின் பிரச்சினை மொழி அடிப்படையில் வளர்ந்தாலும் எல்லாத் தேசங்களிலும் அப்படிஇருக்கவில்லை. உதாரணமாக இந்தியாவை எடுத்துக் கொள்வோம். இந்தியாவில் பலவிதமான சிறுபான்மையினர் வாழ்ந்து வருகின்றனர். சாதி, மதம், மொழி போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்ட சிறுபான்மை இயக்கங்கள் பல இந்தியாவில் இயங்கி வருகின்றன. வரப்போகும் இந்தியத் தேர்தல் காரணமாக இவ்வியக்கங்களின் முக்கியத்துவம் பெருமளவு கூடி இருக்கின்றன.

இந்தியாவில் மிகப் பெரிய சிறுபான்மையினர் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லப் படுபவர்களே. இவர்களைத் தான் மகாத்மா காந்தியும் ஹரிஜனர்கள் என்று கூறினார். ஆனால் இவர்கள் உண்மையிலேயே சிறுபான்மையினர் அல்ல. ஏனெனில் இவர்கள் இந்தியாவின் சனத்தொகையில் ஐம்பத்து மூன்று வீதத்திற்குக் கூடியவர்களாய் இருக்கின்றனர். ஆனால் அரசு இயந்திரம் பிராமணர்களிலும், மற்றைய உயர்சாதி மக்களிலும் தங்கி இருப்பதனால் இவர்கள் மேலும் இம்சிக்கப் பட்டு வருகின்றனர்.

வி.பி.சிங் பிரதமராயிருந்த காலத்தில் இவர்களின் சார்பாகத் தான் அரச உத்தியோகங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் கூடிய பங்கு கொடுக்க வேண்டுமென்ற மசோதாவைக் கொண்டு வந்தார். ஆனால் பெருஞ்சாதி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் தலைவர்கள் இம்மசோதாவை எதிர்த்து முறியடித்து விட்டனர். இதனால் வி.பி.சிங் பிரதமர் பதவியில் இருந்து இறங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லப்படுபவர்கள் எல்லோருமே ஒருங்கு சேர்ந்து ஸ்தாபன ரீதியாக ஒற்றுமைப்பட்டு சரியான உபாயங்களைப் பாவிப்பதானால் அவர்களுக்கு வெற்றி நிச்சயம். அப்படி ஒரு ஸ்தானம் (Elit-Panthen( என்ற பெயரில் உருவாகி தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது ஆனால் அரசாங்கமும் பெருஞ்சாதி மக்களின் தலைவர்களும் அதை முறியடிப்பதில் வெற்றி கண்டார்கள்.

இலங்கையில் தாழ்த்தப்பட்ட மக்களின் சனத்தொகை பெருஞ்சாதி மக்களிலும் பார்க்க குறைவானது. இதற்கு நேரெதிராக இந்தியாவில் நிலைமை தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சாதகமானது ஆனால் இவ்வளவு காலமும் அரசு யந்திரத்தின் பலத்தைப் பாவித்து அவர்கள் நசுக்கப்பட்டு வந்துள்ளார்கள்.

இந்தியாவில் இரண்டாவது, சனத்தொகை கூடிய சிறுபான்மை முஸ்லிம் மக்கள் தான். உலகத்திலேயே மிகக் கூடிய முஸ்லிம்கள் வாழ்வதும் இந்தியாவில் தான். இன்றைக்கு இந்தியாவில் இன்னொரு வகையான இந்து - முஸ்லிம் பகைமை உச்சத்திற்கு வந்துள்ளது. அயோத்தி நகரில் இருக்கும் ஒரு முஸ்லிம் பள்ளிவாசல் பழைய இந்துக் கோவில் இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ளது என்று குறை கூறி அவ்விடத்தில் இராமருக்கு ஒரு கோவில் கட்ட வேண்டும் என்று இந்து மதத் தீவிரவாதிகள் ஒரு இயக்கத்தைக் கிளப்பி உள்ளனர். இந்தக் கிளர்ச்சியில் ஈராயிரத்திற்கு மேற்பட்டவர்கள் ஏற்கனவே மடிந்திருக்கிறார்கள். இவ்வியக்கத்திற்குத் தலைமை தாங்குவதில் வலது பாரதிய ஜனதாக் கட்சி முன் நிற்கிறது. அவர்கள் இந்தக் கோரிக்கையுடன் நின்று விடவில்லை. இந்திய அரசியலமைப்பிலும் முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகளை வாபஸ் பெற வேண்டுமென்றும், பாகிஸ்தான் வசமிருக்கும் காஷ்மீர் பிரதேசம் இந்தியாவுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூட கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்தியாவின் சனத்தொகையில் நூற்றுக்கு என்பகது வீதத்திற்கு மேற்பட்டோர் இந்துக்கள், ஆனபடியால் இந்து தீவிரவாத கட்சிகளுக்கு அவர்களது இயக்கத்திற்கு பெருமளவில் செல்வாக்கைப பெறக் கூடியதாக உள்ளது.

நேரு இருக்கும் வரையிலும் இந்தியாவை ஒரு மதச்சார்பற்ற நாடாக பாதுகாத்து வந்தார். ஆனால் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் இந்திய தேசிய காங்கிரஸை ஒரு இந்துமத ஸ்தாபனமாகக் கட்டி வளர்த்ததால் முஸ்லிம் மக்களுடைய நம்பிக்கையைப் பெறமுடியாமல் போய்விட்டது. இன்றைக்கு நிலைமை மோசமாக மாறிவிட்டது.

இந்தியாவில் பல இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கிறார்கள். (குஜராத்தியர், பஞ்சாப்பியர், மராட்டியர், மகாராஷ்டிரர், வங்காளிகள், மலையாளிகள், தமிழர் போன்ற பல இன மக்கள் ஒரு தேசத்தின் கொடியின் கீழ் வாழ்ந்து வருகிறார்கள்) எனவே இந்தியாவை ஒரு தேசம் என்று கூறுவது கூட சரியா என்ற கேள்வி எழுகிறது. வெள்ளைக்காரன் இந்தியாவிற்கு வரமுன் இந்தியா பல ராஜதானிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றில் சிலவற்றை இந்து ராஜாக்களும், மற்றையவற்றை முஸ்லிம் அரசர்களும் ஆண்டு வந்தார்கள். முஸ்லிம் அரசர்கள் முழு இந்தியாவையுமே அடக்க எத்தனித்த போது அதில் அவர்கள் வெற்றி பெறவில்லை. வெள்ளைக்கார ஏகாதிபத்தியவாதிகள் தான் முஸ்லிம்களையும், இந்துக்களையும் தோற்கடித்து இந்தியர்வை ஒரு ஐக்கிய நாடாக உருவாக்கினார்கள். இந்த ஒற்றுமைப் படுத்தப்பட்ட இந்தியாவுக்குள் பழைய வெவ்வேறு இனங்களும், வளர்ந்து வந்து சுதந்திரத்திறகுப பின் ஒவ்வொரு பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால் அவர்கள் மத்தியிலிருந்த எதிர்ப்பு மனோநிலை மாறவில்லை. அதோடு மத்திய அரசாங்கத்திற்கெதிராக கூடிய அதிகாரங்கள் கோரி இயக்கங்களும் கிளம்பின. இதைத்தான் இன்று பஞ்சாப்பில், காஷ்மீரில், அஸ்ஸாமில் காண்கிறோம். தமிழ் நாட்டில் கூட ஒரு பிரிவினைவாத



இயக்கம் இருக்கத் தான் செய்கிறது.

இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது மிகவும் கஷ்டமான விடயம். ஒவ்வொரு இனங்களையும் தடையில்லாது பொருளாதார ரீதியிலும், கலாசார ரீதியிலும் வளரவிட்டு, அதன் பின் அவர்கள் எல்லோரையும் ஒரு உண்மையான சமஷ்டி அரசாங்கத்தின் கீழ் ஒற்றுமைப்படுத்துவது தான் ஒரே வழி.

நன்றி - நூலகத்திட்டம்



# ...லை?

...க்கான
...ஆசிரியர்கள்:

...பல்கலைக் கழக
...யில் கட்டவிழ்த்து
...உரிமை மீறல்களை
...கண்டிக்கும் ஒரு

...உரிமைகட்காக
...நிறுவனங்களுடன்
...வருகிறது இது.

...களை வெளியிட்டு
...அறிக்கை ஆழியின்
...ரினைக் கொண்ட

...க அரசு, இந்திய
...ளிக் குழுக்கள் என
...உரிமை மீறல்கள்
...அம்பலப்படுத்தப்

...கோபத்திற்கும்,
...இந்த மனித
...கழக ஆசிரியர்

...ாரு தரப்பினரும்
...யில் இவ்வறிக்கை
...எடுத்துப் பயன்
...றிப்பிட வேண்டிய
...இலங்கை அரசு,
...ளை இந்தியாவும்,
...ாராளிக் குழுக்கள்
...லிகளும் தத்தமக்
...ர்.

...பத்திரிகையான
...சில பகுதிகளை
...ர்கள் அறிந்ததே.
...றிக்கையான 'அழி
...ல ...நதிகள் இங்கே
...யின்றி.

கொடுமைகளாலும் தமிழர்களைத் தண்டிப்பது பொருத்தமானதாகப் பட்டது.

இந்நிகழ்ச்சிப் போக்குப்பற்றி, இதன் சுயமாகவே பலமடையும் தன்மையாலும் உபகண்டத்தின் அரசியலில் இதன் பொதுவான நகர்ச்சியில் இதன் மிகவும் மிகைப்படுத்தப்பட்டுத் தோன்றும் இயல்பாலும் இது ஒரு பொதுவான சாபக்கேடு என்று கூறினோம். இது இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைகளாய் இருந்தாலென்ன, அல்லது இந்தியாவில் சீக்கியரின், காஷ்மீரியரின் அல்லது அசாமியரின் பிரச்சினைகளாயிருந்தாலென்ன அரசாங்கங்கள் ஒரு நெறிமுறையிலமைந்ததும், நியாயமானதுமான ஒரு பார்வைக்கான வல்லமை அற்றனவாகவே இருந்தன, மாறாக விளக்கமின்மையுடன் கூடிய ஒரு அடக்குமுறையையே பதிலாக ஏற்படுத்த முனைகின்றன.

இவற்றைத் தொடரும் அந்நியப்படுத்தலானது தீவிரவாதிகளின் வன்முறைகளுக்கும், சர்வாதிகாரத்தன்மையுடைய அமைப்புகளுக்கும் நம்பகத்தன்மையும், பலத்தையும் அளிக்கின்றன.

இலங்கையில் அரசாங்கத்தின் மீது அதிக விசனமடைந்துள்ள பலபேரை LTTE இனராலும், J.V.P. இனராலும் பெறப்படமுடிந்த விளைவுகள் அவர்களின் முறைகள் மட்டுமே செயல்படத் தக்கது என்று நம்பவைத்துள்ளது. பல தசாப்தங்களாக தமிழ்த் தலைவர்களும், தமிழ்ப் பாராளுமன்ற அங்கத்தவர்களும் இன வேற்றுமைபற்றியும், சுயாட்சிபற்றியும் பேசிப்பார்த்தற்கும் அமைதியான முறையில் எதிர்ப்புத்தெரிவித்ததற்கும் விளைவாக அதிருப்தி, ஏளனம், திட்டமிட்ப்பட்டு மேற்கொள்ளப்பட்ட வன்முறை என்பவற்றையே சம்பாதிக்க முடிந்தது.

பெரிய விவசாய நிலங்களின் மீது பல பல்தேசிய அமைப்புகளின் நேரடி நிர்வாக உரிமையாலும், மேற்குலக முதலீடுகளின் அதிகாரங்களுடன் நன்கு பிணைக்கப்பட்ட அரசின் பொருளாதாரக் கொள்கைகளாலும் விளைந்த வறுமை, வாழ்க்கைத் தர வீழ்ச்சி என்பவற்றிற்கு எதிராக தெற்கில் எதிர்ப்புத் தெரிவித்த பொதுசன அமைப்புகளும், தொழிற்சங்கங்களும், குண்டர் கூட்டங்களின் வன்முறைகளையும், பாரிய அளவிலான பதவிநீக்கல்களையும் சந்திக்க நேர்ந்தது.

அரசாங்கமானது 1980 இல் அசையும் தன்மையற்றதாக தோன்றியது ஒரு தசாப்தத்திற்கும் குறைவான காலப்பகுதியில் கொலை, நாட்டை செயலிழக்கச் செய்தல், அதிகார அமைப்பின் மிக உள்ளிடங்களில் கூட பீதியை விளைவித்தல், போன்றவற்றிற்கான தனது வல்லமையை நடைமுறையில் J.V.P. யானது காண்பித்தபின் அதனை வேறுவழியின்றிப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. இதேபோன்ற ஒரு அமைப்பை LTTE ஏற்றுக்கொண்டது. அரசை எதிர்த்த ஆனால் பலத்தில் குறைவான சிங்கள, தமிழ் எதிர்ப்பாளர்களுக்கு அரசு விதித்த கீழ்த்தரமான விதிக்கு மாறாக அவர்களோ ஒரு அரச விருந்தாளிகட்கு வழங்குவது போன்ற ஒரு உயர்ந்த வரவேற்பிற்கு உட்படுத்தப் பட்டனர் குற்றவாளிகளின் கூட்டங்கள் என அரசினால் முன்பு பெயர்சூட்டப்பட்ட குழுக்களிடம் அரசு இவ்வாறு சரணாகதி அடைந்தமையை கடந்த காலங்களில் காணப்படாதிருந்த ஆட்சித்திறனை பூசிமெழுக மிகத்தயாராயிருந்த சில சோர்வடைந்த புத்திஜீவிகள் ஒரு சிறந்த ஆட்சித்திறனின் வெளிப்பாடு என புகழ் பாடினர். இதன் இறுதி விழைவானது தற்போது அரசதொலைக் காட்சியில் தொடர்ச்சியாக போதிக்கப்படும் மிதவாதம், நியாயம், பண்பு, என்பவற்றின் மெறுமதியை வசைபாடுவதாக இருந்தது.

## குழப்பநிலைக்கு கொடுக்க வேண்டிய உயர்விலை

மாறும் அரசியலில் தந்திரமாக இலாபம் அடைவதற்காக வழமையாகவே மக்களின் நலன்களைக் கைவிடும் தன்மையால் நாட்டினதும் அதன் விளைவாக மக்களினதும் கௌரவத்திற்கு ஒரு பெரும் விலை கொடுக்கப்பட்டது.

சிரேஸ்ட அமைச்சர்களால் எந்த ஒளிவு மறைவும் இன்றி கூறப்படுவதும் ஜனாதிபதியாலோ அல்லது சக அமைச்சர்களாலோ நிராகரிக்கப்படாததுமான கருத்துகளின் பின்னணியிலிருக்கும் காரணங்களுக்காக இந்த நாடு அதிக விலை கொடுத்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையானது ஒரு பயங்கரவாத அமைப்பு என்று பெயர் கூறப்பட்டது. மேலும் சட்ட சடைமுறைகளையிட்டு குறைந்தளவு உணர்வே காட்டப்படுகின்றது. பல இளைஞர்கள் சந்தித்த முறைகேடான விதி போலல்லாது, J.V.P. யுடன் உண்மையாக தொடர்பு வைத்திருந்தவர்களோ அல்லது தொடர்பு வைத்திருநத்ததாக சந்தேகிக்கப்பட்டவர்களோ சரணடைவதற்கு வசதிசெய்யும் முகமாக ஜனாதிபதியால் ஒரு சுயாதீனமான சரணடைதற்குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. இது சிறிது காலத்திற்கு நன்கு செயற்பட்டதுடன் இக்குழுவின் வேலையானது ஆவணியுடன் ஜனாதிபதியால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. சரணடைந்தவர்களில் ஒரு பெரும் பகுதியினர் விடுவிக்கப்பட்டபின் கொல்லப்பட்டு விட்டனர் என்பது பின்னர் நன்கு தெரியவந்துள்ளது. இக்குழுவானது ஏற்படுத்தப்பட்டிராவிட்டால் இது சிலவேலை நடந்திருக்க மாட்டாது. பாராளுமன்றத்தில் கேள்விகட்கு பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இவர்கள் படையினரால் கொல்லப்பட்வில்லையென்றும், J.V.P. யில் ஆத்திரமுற்ற கிராமத்தவர்களால் தான் இவர்கள் கொல்லப்பட்டனர் என்றும் வலியுறுத்தினார்.

கார்த்திகை மாதத் தொடக்கத்தில் "The Island" பத்திரிகை திருக்கோவிலிலும், அக்கரைப்பற்றிலும் சுமார் 30 தலையற்ற உடல்கள் காணப்பட்டதாக, அப்பகுதிகளில் நன்கு தெரியவந்த ஒரு உண்மையை செய்திப்பிரசுரம் செய்தது.

கார்த்திகை 4ம் திகதி "Sunday observer" இல் பிரசுரிக்கப்பட்ட பாதுகாப்பமைச்சு அறிக்கையொன்று ஒரு "விசாரணை" யைத் தொடர்ந்து வெறும் கபடத்தன்மையானது என்று விபரித்திருந்தது. அப்பகுதியிலுள்ள ஊர் முக்கியஸ்தர்கள் அத்தகைய உடல்கள் காணப்பட்டதை மறுத்துள்ளதாக இவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது. ஒரு பயங்கரம் நிறைந்த சூழலில், அகதிகள் நிறைந்த ஒரு தனிமையான பிரதேசத்தில் தமது வாழ்க்கையைக் கற்பனைபண்ணிப் பார்ப்பது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல.

வேறுபட்ட பல வழிகளில் ஒரு சமூகத்தின் இயக்கம் எவ்வாறு செயலற்றுப் போயுள்ளது என்பதற்கான ஏராளமான சான்றுகளில் பின்வரும் இரண்டும் அடங்கியுள்ளன. மரணவிசாரணை, உடலைப்பரிசோதித்தல், சட்டத்தின் முன்னிலையில் பதில் கூறுதல் போன்ற விஷயங்கள் உள்ளமையை அறியாமலேயே ஒரு சந்ததி வளர்ந்து வருகின்றது.

இந்த வகையில் அரசு தன்னைத்தானே மிகவும் இழிவுபடுத்தியுள்ளது. ஒரு விடுதலை அமைப்பு என்ற வகையில் தாம் அரசைவிட எந்தவகையிலும் உயர்ந்தவர்கள் என்பதை புலிகள் காட்டத்தவறிவிட்டனர். புலிகள் கூட அப்பட்டமாக எல்லாவற்றையும் மறுப்பதன் மூலம் விஷயத்தை முடித்துக் கொளவர். முஸ்லிம்களின் கொலை, அவர்களின் அதிகாரக் குறியீடான "துரோகிகள்" என அழைக்கப்படுவோரினை துன்புறுத்தலும், அவர்களைக் கொலைசெய்தலும் போன்றவற்றைப் புலிகள் மறுத்துவிடுகின்றனர். இந்நாட்டில் மனிதத்துவத்தின் பெறுமதி இழக்கச் செய்யப்பட்டுள்ளதுடன், இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வல்லமை அரசிடம் இல்லாமல் இருப்பது இவ்விழிப்புணர்வை மேலும் அதிகரிப்பதாக உள்ளது.

ஆனால் அரசானது எமது பெறுமான முறைகளின் (Value Systems) ஒரு விளைவு மட்டுமலலாது அம்முறைகளை ஊக்குவிக்கும் ஒரு சக்தியுமாகும், மேலும் மதச்சார்பற்ற நிறுவனங்களும் இந்த நம்பிக்கையிழந்த நிலைமைக்குப் பொறுப்பேற்க வேண்டும். பாராளுமன்ற எதிர்க்கட்சிகள் கூட இந்த முழுப் பிரச்சினைகளின் பாரதூரத்தன்மையைப் புரிந்துகொள்ளுவதற்கான எந்த அறிகுறிகளையும் காண்பிக்கவில்லை இந்நாட்டில் எதிர்க்கட்சிகளின் மனித உரிமைகள் பற்றிய நோக்கமானது இவ்விஷயத்தைப் பற்றி ஆழமாக எடுத்துக் கூறுவதை விடுத்து, இதனை அரசை அவமதிப்பதற்கான ஒரு வழிவகையாக பாவிக்கும் தன்மையால் பலமிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

சில அறிவாற்றலும், தெளிவும் உள்ள எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கூட தமிழர் பிரச்சினைபற்றிய விவாதத்தில் அவர்களின் பங்களிப்பானது வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்ப்பது மட்டில் நின்று விடுகின்றது. பல்லாண்டு காலமாக அரச வன்முறையால் துன்புற்றுவந்த தமிழ்ச்சிறுபான்மையினரிடம் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த முயற்சிக்கும் முக்கிய விடயம்பற்றி ஆராயப்படவில்லை.

அரசாங்கம் அதன் நோக்கம் என்னவாக இருப்பினும் பாராளுமன்றத்திற்கு வெளியே ஒரு தீர்வைத் தேடுவதை நியாயப்படுத்த முனைவது, நாட்டின் தலைவிதியைத் தீர்மானிப்பதில் தலைமைவகிக்கும் ஒரு அமைப்பு என்ற வகையில் அதன் பெறுமதியை இல்லாமற் செய்வதாக அமையும் ஜனநாயகத்தின் நலனுக்காக எதிர்க்கட்சிகள் அதிக பொறுப்புணர்வைக் காட்டவேண்டிய ஒரு காலக்கட்டம் இதுவாகும்.

---

# ...ம்:

...வில் ஸ்ரீலங்கா மு. கா. நிச்சயம் ...0–25 இடங்களைப் பிடிக்கும் ...என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ...தேர்தல் முடிவுகள் அந்தத் தன் ...நம்பிக்கையை நிரூபிப்பனவாக ...அமையவில்லை. முஸ்லிம் காங் ...கிரசின் ஆசன எதிர்பார்ப்புக்கள் ...நிறைவேறவில்லை.

## ...முஸ்லிம் காங்கிரஸ் – ...பாராளிகள் முரண்பாடு

...ழக்கிலங்கையைப் பொறுத்த ...ரையில் தமிழ் விடுதலைப் ...பாராளிகளுக்கும் அங்கு கணிச ...மான தளமுண்டு. பல விடங்களி... தமிழர் – முஸ்லிங்கள் என்ற ...வேறுபாடுகளை ஊடறுத்துப் ...பாராளிகள் இயக்கங்களிற் சேர்ந் ...துள்ளனர்.

...தனால் முக்கியமான தமிழ்ப் ...பாராளிகள் குழுக்கள் மொழி ...ழித் தேசியத்தின் அடிப்படை ...ல் தங்கள் அணிகளைக் கட்டி ...வளர்க்கத் தீர்மானித்தனர்.

...னால் ஸ்ரீலங்கா முஸ்லிங் காங் ...ரசோ தமிழ்க் குழுக்கள் முஸ்லிங் ...களுடன் ஏற்படுத்தும் உறவானது ...ன்மூலம் ஏற்படுத்தப்பட வேண் ...ம் என்ற ஒரு நிலைப்பாட்டை ...மேற்கொள்ளத் தொடங்கிற்று.

## கொழும்பை நோக்கி

இதனால் முக்கிய தமிழ்க்குழுக்களு க்கும், ஸ்ரீ. மு. கா. வுக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டன. அதன் காரணமாகப் படிப்படியாக முஸ் லிங் காங்கிரசும் கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் ஒரு நிலை ஏற்பட்டது.

அத்துடன் முஸ்லிங் காங்கிரசுக்கும் முஸ்லிம் வர்த்தக சக்திகளின் ஆதரவு தேவைப்பட்டது. இதுவும் முஸ்லிங் காங்கிரசை மேலும் கொழும்பில் நிலைப்படுத்தியது. வட–கிழக்கில் முஸ்லிங் காங்கிரஸ் மாகாண சபையின் பிரதான எதிர்க்கட்சியாகவிருந்தும், தனது பலத்தைப் பயன்படுத்தவில்லை. மாகாண சபையில் முதலிடம் வகித்த குழுவுடனும், அந்தத் தேர்தலையே மறுதலித்துப் போராட்டம் நடத்திய குழுவுடனும் முஸ்லிங் காங்கிரஸ் முரண்டியது.

## திரிசங்கு சொர்க்கம்

மாகாணசபை கலைக்கப்பட்டு விடுதலைப்புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்ட பொழுது முஸ்லிங் காங்கிரசின் திரிசங்கு நிலை மேலும் தெளிவாகிற்று.

அந்த நிலையில முஸ்லிங் காங்கிரஸ் மத அடிப்படை வாதத்தை மேலும் மேலும் வற்புறுத்தும் ஒரு நிலைப்பாட்டினை மேற்கொள்ளத் தொடங்கிற்று.

இந்த நிலைமைகள் முஸ்லிங் காங்கிரசின் அரசியல் தளத்தை வேகமாய்ப் பாதிக்கத் தொடங்கிற்று. கிழக்கிலங்கை முஸ்லிங்களைத் தளமாகக் கொண்டு கிளம்பிய ஒரு முஸ்லிம் அரசியல் கட்சி மேற்கூறிய காரணங்களால் தனது அரசியல் வலுவை இழக்கத் தொடங்கிற்று.

## மீண்டும் கொழும்பு மேலாண்மை

அந்த வலுவை மேலும் குறைக்கும் வகையில் அமைந்தது ஜனாப். மன்சூரின் அமைச்சர் நியமனம். மீண்டும் யூ. என். பி., எஸ். எல். எவ். பி. மேலாண்மையே முஸ்லிம் அரசியலில் வலுக் கொள்ளத் தொடங்கிற்று.

ஆனால், இவற்றினூடே முஸ்லிம் காங்கிரசே இலங்கையின் 'முஸ் லிம் கட்சி' என்ற கருத்தினை முக்கிய அரபு நாடுகளிற் பரப்பும் ஒரு முயற்சியும் மேற்கொள்ளப் பட்டது.

ஆனால், அதிலும் முஸ்லிங் காங்கிரஸ் அதிக வெற்றியீட்டிவிட்டதெனக்கூறி விட முடியாது.

இவ்வாறாகப் பிரதேச முஸ்லிம் கட்சி தனது தளத்திலிருந்து நழுவிச் செல்ல, மீண்டும் கொழும்புத் தலைமை தலைதூக்க முயல்வது ஆச்சரியமன்று.

அந்தத் தலைதூக்கலின் வெளிப்பாடே ஜனாப் எம். எச். முஹம்மது அவர்களின் செயற்பாடுகளாகும். ஜயவர்த்தனா ஆட்சியின் போக்குவரத்து அமைச்சராகக் கடமையாற்றிய ஜனாப் முஹம்மது யூன் 10–ல் தொடங்கியுள்ள இந்த யுத்த கால கட்டத்தில் முக்கியமான அரசியற் பங்கினை வகிக்கின்றார் எனலாம்.

## முஹம்மதுவின் அரசியற் கிளவிகள்

தமிழ்ப் போராளிகளுக்கு இஸ்ரேலிய உதவி உண்டென்ற கூற்றும், யுத்த வேளையில் மக்கள் நடத்தை எவ்வாறிருக்க வேண்டும் என்பது பற்றிய அவர் அறிக்கையும், மிகமுக்கியமான "அரசியற் கிளவிகள்" (Political utterances) ஆகும். மேலாக அண்மையில் முஸ்லிங்களின் அரசியல் எதிர்காலம் பற்றி நடந்த கருத்தரங்கில் முஸ்லிங்களுக்கெனத் தனியொரு மாநில ஆட்சி வேண்டாம் என்பதும் மிக முக்கியமான ஓர் அரசியற் கூற்றாகும்.

## முஸ்லிம் தலைமைத்துவம்

ஜனாப் எம். எச். முஹம்மதுவின் அரசியல் நிலைப்பாட்டைப் பற்றி மேலும் ஆராய்வதற்கு முன்னர் இலங்கை முஸ்லிம் தலைமையின் தற்போதைய நிலைமை பற்றிய சில உண்மைகளை மனத்திருத்திக் கொள்ளல் அவசியம்.

இன்று அகில இலங்கை மட்டத்திலான ஒரு தலைவர் என்று கூறப்படத்தக்க முஸ்லிம் தலைவர் எவரும் இல்லையென்றே கூறவேண்டும். டாக்டர் கலீல் (இப்பொழுது இளைப்பாறியுள்ளார்), சேர் ராசீக் பரீது, பதியுதீன் மஃமுது (ஒதுங்கியுள்ளார்) போன்ற தேசிய முஸ்லிம் தலைவர்கள் எவரும் இன்று இல்லை.

ஜனாப் எம். எச். முஹம்மது அவர்கள் அந்த நிலையைப் பெறுவதற்கு இன்று முயல்கின்றார் எனலாம். ஆனால், தேசியத் தலைமை பற்றிய முஸ்லிங்களிடையே நிலவும் பெறுமானங்களை இவர் உடையவர் எனவும் கூறமுடியாதுள்ளது. பதியுதீனின் இஸ்லாமிய சோஷலிச முன்னணி முதலிடம் வகித்த பொழுது இவர் இஸ்ரேலியத் தொடர்புடையவர் என்ற குற்றச் சாட்டு ஒன்று நிலவியது.

இன்றைய நிலையில் அரசாங்கம் கேட்க பார்க்க விரும்புவனவற்றை இவர் கூற முனைகின்றார் என்பதிற் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

இவ்வேளை இன்னும் ஒரு உண்மையைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். முஸ்லிம் அமைச்சர்களாக விளங்கும் மன்சூர், ஹமீது ஆகியோரிடையே கருத்தொருமை இருப்பதாகக் கூறமுடியாது. இன்றைய அரசியலில் முக்கிய இடம் பெறும். ஜனாப்கள் எம். எச். முகம்மது. ஏ. சி. எஸ். ஹமீது, ஏ. ஆர். மன்சூர் ஆகியோர் ஒருமைப்பட்ட ஒரு முஸ்லிம் நிலைப்பாட்டை எடுத்துக் கூறத்தக்க அளவுக்கு ஒருமித்து நிற்பதாகவும் தெரியவில்லை.

இந்த நிலைமை காரணமாக தேசிய மட்டத்திலும் சர்வதேசிய மட்டத்திலும் முஸ்லிம் அபிப்பிராயத்தை ஈழத்துத் தமிழ்ப் போராட்டத்திற்கெதிராகத் திசை திருப்பும் ஒரு நிலை காணப்படுகின்றது.

பக்கம் 8 →

நன்றி - நூலகத்திட்டம்



# பெண்களும் மனித உரிமையும்

மனித உரிமைகள் மீறப்படுவதற்கு இன்று எந்த ஒரு நாடோ, அரசாங்கமோ விதிவிலக்கல்ல. ஆனால் இவற்றின் பாதிப்பிற்குள்ளாகும் பெண்களின் அவல நிலைகள் பல தரப்பட்டவையாகும்.

பெண்கள் பாலியல் வன்முறைகட்கு உள்ளாக்கப்படல் இவற்றுள் பொது நிகழ்வாக உள. குடும்பத்தவர் முன் பெண்கள் பலாத்காரப்படுத்தப்படல், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இளம் பெண்கள் மீது பாலியல் வன்முறைகள் பிரயோகித்தல், கணவனிடம் ஒப்புதல் வாக்கு மூலம் பெறுவதற்காக மனைவி துன்புறுத்தப்படல், மகள் அரசியலில் ஈடுபட்டமைக்காக தாயார் சுட்டுக் கொல்லப்படல், காணாமற் போனோரைத் தேடுவதில் முனைப்பாக ஈடுபட்ட தாயோ, மகளோ பயமுறுத்தப்படல், இன்று சாதாரண நிகழ்வுகளாகி விட்டன. இக் குற்றங்களில் பெரும்பாலானவை இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் ஆகியோராலேயே புரியப்படுவது யாரும் அறிந்ததே.

இப்படியாகப் . பெண்களுக்கெதிராக இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் முடிவற்ற தொடர் நிகழ்வுகளாகவே உள்ளன. இவற்றை எப்போது முடிவுக்குக் கொண்டு வருவது, யார் கொண்டு வருவது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இவற்றிற்கெதிராகக் குரல் கொடுக்கும் பெண்நிலைவாதிகள், அரசியலில் பலம் வாய்ந்தவர்கள், சமூக அமைப்பாளர்கள் பெண்களாக இருக்கும் கட்டத்தில் அவர்களும் இக் கொடுமைகளுக்கு இலக்காகின்றனர். ஏனைய பெண்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதின் மூலம் ஓர் சமுதாயத்தினையே பழிவாங்க முற்படுகின்றனர். பாலியல் ரீதியாக வன்முறைகளில் பெண்களை இலக்காக்குவது இலகுவாக உள்ளது. பயமுறுத்தல்கட்கு அஞ்சி, பெண்கள் தமது பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக எதனையும் செய்யத் தயாராக இருக்கின்றனர். இம் மனிதாபிமானமற்ற போக்குகள் கண்டிக்கப்படாது இவற்றிற் கெதிராக குரல் கொடுக்கப்படாத விடத்து இவை தொடர்ந்தும் உக்கிரமாக இடம் பெற இடமுண்டு.

ஆகவே, இவ்வாறான மனித உரிமை மீறல்கட்கெதிராக நாம் இயன்றவரை குரல் கொடுத்தல் இன்றைய காலகட்டத்தில் மிக மிக இன்றியமையாததாகும். இதன் மூலம் எதிர்காலத்திலாவது இவை இடம் பெறாது பாதுகாக்கப்படுவதற்கு இட முண்டு.

ஓர் தனிநபர் மனித வாழ்வின் அடிப்படைத் தேவை சுதந்திரமே. இச் சுதந்திரத்தினை வெளிப்படுத்தக் கூடிய பல வழிகள் இன்று உண்டு. ஓர் தனிநபர் அறிவுபூர்வமான கருத்துக்களை வெளியிடல், சுதந்திரமாக ஒன்று கூடல், பாரபட்சமற்ற விசாரணையினை வேண்டி நிற்றல் போன்றவை யாவும் சுதந்திரத்தின் வெளிப்பாடுகளாகும். ஆனால் இவை யாவும் இன்று எட்டாக் கனிகளாகவே உள. சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அரசாங்கங்களே இவற்றை மீறுகின்றன. எவ்வித கஷ்டமான சமூக, அரசியற் பிரச்சினைகளை எதிர் கொள்ளும் கால ங்களிலும் இவற்றை மீறும் அரசு கட்கு மன்னிப்பே கிடையாது.

ஆண்கள், சிறுவர் போன்றோருக்கு ஏற்படுத்தப்பட்டது போலவே, பெண்களது மனித உரிமைகளும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் மூலம், சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இச் சிபாரிசுகள் எழுத்தளவில் மட்டும் தானா என்ற கேள்விகளும் எழுகின்றன. பெண்களைப் பொறுத்தவரை மனித உரிமை மீறல்களில் முன்நிற்பது பலாத்காரமே. இது ஒரு வகை சித்திரவதையே. தடுத்து வைக்கப்படும் பெண்கள் மீது மட்டுமன்றி சாதாரண குடிமக்கள் மீதும் இராணுவத்தினரால் இழைக்கப்படும் மிகக் கடுமையான கொடுமையாகவே இதனை வர்ணிக்கலாம். பெண்கள், பலாத்காரம் மூலம் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதை ஐ.நா. பிரகடனம் தடை செய்த போதிலும் பெண்கள் தொடர்ந்தும் இப்பாலியல் வன்முறைகட்கே இலக்காகி வருவது மிக வருந்தத் தக்கது.

போர் சூழ்நிலைகளைக் காரணம் காட்டி, இவ்வாறு பெண்களை இம்சைப்படுத்தல் எமது பிரதேசத்திற்குப் புதிதல்ல. பெண்கள் கைதுசெய்யப்படும் நிலையில் கர்ப்பிணியாக இருந்துவிட்டால் அவள் பல்வகைத் துன்பங்களை அனுபவிக்க நேரிடுகின்றது. இதனால் கருச்சிதைவு கூட ஏற்படுகிறது. பாலியல் வன்முறைகளினால் தடுப்புக் காவலில் வைக்கப்படும் பெண்களோ அன்றி சாதாரண பெண்களோ அதன் மூலம் தாயாக நேரிடின் அவளுக்கு ஏற்படும் சுமைகள் சமூகத்தின் அவலநிலைகள் பலப்பல.

**சரோஜா**

திடீரென உழைக்கும் ஆண்கள் காணாமற் போவதனால் பெண்கள் சடுதியாக ஆதரவற்ற நிலைக்குள்ளாகின்றனர். இதனால் தமது உறவினரின் நிழலில் தங்க வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. கணவன் இறந்தமை தெரியப்படுத்தாத கட்டத்தில் விதவையாக்கப்பட்ட மனைவி, ஓய்வூதியம் போன்ற அரச சலுகைகளைக் கூட பெறமுடியாதுள்ளது. இவ்வாறு அதிகாரபூர்வமாகவோ அன்றி சட்ட பூர்வமாகவோ இறப்பைத் தெரிவிக்காத விடத்து பெண்கள் பெரும் இன்னல்கட்காளாகின்றனர். காணாமற் போனவர்களைத் தேடும் பணியில் இவர்கள் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர். காணாமற் போனவர்களைத் தேடுதலை பெண்கள் பல வருடங்கள் சென்றாலும் கைவிடுவதில்லை. காணாமற் போனோர் திரும்பி வரும் வரை அல்லது அவர்கள் உடல் காணப்படும் வரை இவர்கள் நிலையற்ற தன்மையிலேயே உள்ளனர். இவ்வாறு அல்லற்படும் பெண்களுக்கு தேடப்படுபவர்கள் காணப்படும்வரை அரசு உதவிப் பணம் கொடுக்க வேண்டும்.

மேலும் பெண்கள் போர் சூழ்நிலைகளினால் அகதிகளாக்கப்படும் போதும் பலாத்கார பாலியல் உறவுகட்கு தப்புவதில்லை, அகதிகளாக இடம் பெயரும் பெண்களுக்கு ஆதரவற்ற நிலை காணப்படுவதனால் இவர்கள் இவ்வாறான தாக்குதலுக்கு இலகுவில் உள்ளாகின்றனர். போர் நிகழ்வுகள் பயங்கரவாத செயல்களினால் அரசுகள் கவிழ்க்கப்படும் நிலைகளைச் சாதகமாகக் கொண்டு பெண்களை பாலியல் வன்முறைகட்கு உள்ளாக்குதல் சாதாரணமாக பல நாடுகளில் இடம் பெற்றுள்ள நிகழ்வுகளாகும். ஆகவே அரசுகள் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்தலை உறுதி செய்யும் வரை இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெறும்.

பெண்கள் சில கலாசார சமூக பாதிப்புக்களினால் தமக்கு நிகழும் துன்பங்களை முறையீடு செய்வதோ வெளிக்காட்டுவதே இல்லை. கடந்த காலங்களில் பல பெண்கள் தமக்கெதிரான மனித உரிமை மீறல்களை வெளிக்காட்டியுள்ளனர். இதுமட்டுமன்றி ஏனைய சமூக பெண்களின் துன்ப துயரங்களையும் எடுத்துக்காட்டியுள்ளனர். இவர்கள் குழுக்களாக இயங்கவும் ஆரம்பித்துள்ளனர் எல்சல்வடோரில் கொமாரெஸ் (COMADRES) என்ற பெண்கள் அமைப்பு மனித உரிமை மீறல்கட்காகத் தொடர்ந்து குரல் கொடுக்க முனைந்துள்ளது. இலங்கையிலும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அன்னையர் முன்னணி மனித உரிமை மீறலுக்காகக் குரல் கொடுத்துள்ளது. தென்னாபிரிக்காவிலும் பெண்கள் மனித உரிமை மீறல்கட்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர். இவ்வாறாக இன்று சர்வதேசச் சமூகத்திலிருந்து பல பெண்கள் மனித உரிமை மீறல்கட்காக, பெண்களுக்காகக் குரல் கொடுக்க முன்வந்துள்ளமை இன்று அவதானிக்கப்பட்டுள்ளது. பெண்களுக் கெதிரான வன் முறைகள் அதிகரிக்கும் காலகட்டத்தில் அதிக பெண்கள் இவ்வாறான நடைமுறைகளில் ஈடுபடும் போக்கு இன்று தெளிவாகியுள்ளது.

ஆகவே, மனித அடிப்படைச் சுதந்திரம் உறுதி செய்யப்படும் வரை, பெண்களின் அபிவிருத்தி என்பது ஓர் கண்துடைப்பாகவே அமையும். துன்பங்களும் துயரங்களும் அபிவிருத்தியின் ஊக்குவிப்புகளாக மனித நடவடிக்கைகளின் பயன்பாடுகள், அவர்களின் சுதந்திரமான இயக்கத்தின் மூலமே பெறப்படவேண்டும். பலாத்காரத்தையும், மனிதாபிமானமற்ற செயல்களையும் சந்திக்கும் எவராலும் இத் தேவைகளை நிறைவாக்க முடியாது. பெண்களின் அபிவிருத்தியின் உள்ளார்ந்த குறைபாடுகளை நீக்க அரசாங்கங்கள் மட்டுமன்றி மனித நேயமுள்ள சகல சமூகங்களும் ஒத்துழைக்க வேண்டும். அரசாங்கம் சமூகத்தில் பெண்களோ இளைஞரோ அன்றி இன, சமய சார் சிறுபான்மையினரது பொறுப்புக்களையோ ஏற்றுக் கொள் ளாவிடில் - எவரது மனித உரி மைகளும் பாதுகாப்பாக இருக்க முடியாது.



## ரஞ்சன் படுகொலை:..

த்தில் மிகவும் மோசமான ஒருவராக அவரது வாழ்வும் நடைமுறையும் காட்டின!

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ்மக்கள் மீதான ஒடுக்குமுறையானது மிகவும் சிறிதளவான நம்பிக்கையுடனேயே தொடரப்படுகிறது. துரதிஸ்டவசமாக வளைகுடா, மற்றும் இந்திய உள்நாட்டுப் பிரச்சினைகள் இங்கு உள்ள நிலைமையின் பாரதூரத் தன்மையை வெளியே தெரியாமல் செய்துள்ளன. இந்தியா நோக்கிப் பாயும் அகதிகளின் பெருக்கெடுப்பானது இலங்கை அரசினது பிரச்சினையை கையாள்வதிலுள்ள இயலாமைக் காட்டுகிறது. புலிகளின் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்த அறிப்பை மிகவும் அபத்தமான விதத்தில் ஒரு சரணடைவாகக் கருதிக் கொண்டு தமது சொந்த மக்கள் மீது குண்டுகளைப் பொழிந்து கொல்லும் ஒரு நாகரீகமற்ற அரசியல் கோட்பாட்டை கடைப்பிடித்தவர் ரஞ்சன். இவர் பொது மக்களுக்கும் ஆயுதமேந்திய தீவிரவாதிக்குமிடையிலுள்ள வேறுபாட்டை (-பெண்கள், குழந்தைகள், ஆகியோரை- இவர்கள் மத்தியிலேயே கெரிலா என்ற மீன் மிகவும் வேகமாக இயங்கும்-) கூட கவனித்ததில்லை.!

பெப்ரவரி மாதத்தின் தொடக்க நாட்களில் நம்பிக்கைக்குரிய பத்திரிகையாளர்கள் யாழ் சென்று அவதானித்து வந்து தெரிவித்த தகவல்களின்படி இலங்கை அரசு விமானப்படைகள் நேபாம் குண்டின் தன்மையைக் கொண்ட பீப்பா குண்டுகளை வல்வெட்டித் துறையிலுள்ள பாடசாலை ஒன்றின் மீது வீசின. கோவில்கள், தேவலாயங்கள், பாடசாலைகள், வீடுகள் என்பவைகள் மீதெல்லாம் இக்குண்டுகள் வீசப்பட்டன. யாழ் குடாநாட்டு மக்கள் அனைவரையுமே குடிபெயர்ந்து வெளியேறுமாறும் தாம் புலிகளை அழிக்கப் போவதாகவும் பகிரங்கமாக குடாநாட்டு மக்களை எச்சரிக்கக் கூட விஜேரத்தின தயங்கவில்லை. பெப்ரவரி இறுதி நாட்களில் மடு அகதி முகாமிலுள்ள ஆயிரக் கணக்கான அகதிகளின் உயிருக்கு எந்த உத்தரவாதமுமற்ற நிலையில் இந்த முகாம் U.N. அகதிகளுக்கான ஸ்தானிகரால் நிர்வகிக்கப்பட்டு வந்ததும் புலிகளுக்கெதிரான தனது யுத்தத்தை நடாத்தவும் பொதுமக்கள் அழிந்து போகவும் உத்தரவிட்டார்.

விஜேரத்னவினால் தமிழ்மக்கள் மீது கட்டவிழுத்து விடப்பட்ட தாக்குதல்கள், சிங்கள பேரினவாதத்தின் முக்கியமான ஒரு கதாநாயகனின் மறைவு என நினைவு கூரப்படுவதன் மூலம் மீளவும் தொடக்கப்படும் என எதிர்பார்க்கலாம். நிலைமையை மேலும் மோசமாக்கும் விதத்தில் 'ஐக்கிய இலங்கை'யை கட்டிக் காக்கப் போராடிய விஜேரத்னவின் கோட்பாட்டை உயர்த்திப் பிடிப்பதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்திருப்பது அனைத்து விதமான சமாதானத்திற்கான இலங்கை மற்றும் இந்தியத் தலைவர்கள் 83 முதல் 89 வரை எடுத்த முயற்சிகளையும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முயன்றதனையும் அர்த்தமற்றதாக்குவதாக உள்ளது!

## முஸ்லிம் தலைமைக்கு விளங்காத உண்மை

முஸ்லிம் தலைமையின் நிலைமை எதுவாயினும், நமக்கு ஒரு பெரும் பொறுப்பு உண்டு. வட - கிழக்குப் பிரதேசம் என்பது தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிங்களையும் தமிழர்களையும் உள்ளடக்கியதே.

அவர்களது மத உரிமைகளையும் மொழியுரிமைகளையும் நிலவுரிமைகளையும் பேணிக்காப்பதே இந்தப்போராட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

முஸ்லிம் தலைமைக்கு விளங்காத, இந்த உண்மையை நாம் முஸ்லிம் மக்களுக்கு உணர்த்துவோம்.

தமிழ் முஸ்லிம் அடிநிலை ஒற்றுமையை உடைக்கக் கிளம்பும் அரசியல் திரிபுக் கோஷங்களின் உக்கிரத்தைப் பார்க்கும் பொழுது தமிழ் முஸ்லிம் ஒற்றுமை எங்கு காணப்படவேண்டுமோ அங்கு தெரியத் தொடங்கியுள்ளது எனலாம். விடுதலையின் விலை ஒழியாத விழிப்பு நிலையே என்பர். இவ்விஷயத்தில் நாம் தொடர்ந்து விழிப்புடன் இருப்போமாக!

-முற்றும்-

இக் கட்டுரை தொடர்பான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன...

— சரிநிகர்

நன்றி - நூலகத்திட்டம்


# தேசியவிடுதலைப் போராட்டம் -

## ஓர் மீளாய்வை நோக்கி...

ஈழவிடுதலைப் போராட்டத்தில் இளைஞர் அமைப்புகள் எவ்வாறு தோற்றம் பெற்றன? எவ்வெப் போராட்டங்களை அவை நடாத்தின? அவற்றை நடாத்தும் போது அவை எவ்வெப் பிரச்சினைகளை எதிர்நோக்கின? எவ்வாறு அவை ஆயுதம் தாங்கிய இயக்கங்களாக வளர்ச்சியுற்றன? தமிழ் அரசியற் கட்சிகளுக்கும் (பிரதானமாக தமிழரசுக்கட்சி, தமிழர் கூட்டணி) இவ்வமைப்புக்களுக்கும் இடையில் இருந்த தொடர்புகள் என்ன? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். அத்துடன் இவ்வாய்வு ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகளின் வரலாற்றுப் பாத்திரத்தை விளக்குவதோடு அவற்றின் தவறுகளைக் கண்டு கொள்ளவும் உதவுவதாக அமையும்.

இந்த வகையில் ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் தோன்றுவதற்கு முன் தோன்றிய கட்சி சார்பற்ற அரசியல் இயக்கங்களாக ஈழத்தமிழர் விடுதலை இயக்கம், தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்பன விளங்கியுள்ளன.

இவ்வமைப்புக்களில் முதலாவதாகத் தோன்றியது 1968 இன் ஆரம்பத்தில் தோன்றிய ஈழத் தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்பாகும். தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியில் இருந்த சிலர் அதுவரை காலமும் தமிழரசுக் கட்சியே தமிழ் மக்களுக்கான விடுதலையைப் பெற்றுத்தரும் என நம்பியிருந்தனர். 1965 இல் தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கத்தை அமைத்துக் கொண்டமையும், தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான மு.திருச்செல்வம் உள்ளூராட்சி மந்திரியாக வந்தமையும் இவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தின.

உயிரையும் துச்சமெனமதித்து 1958ம் ஆண்டு காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தையும், 1960 இல் வடக்கு கிழக்கு முழுமையும் தழுவிய சத்தியாக்கிரகப் போராட்டத்தையும், நடத்திய தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள், போட்டி போட்டுக் கொண்டு வடக்குக்கு பவனி வரும் அமைச்சர்களை வரவேற்பதையும், அவர்களுக்கு மாலை

**இப்பகுதியில் தொடர்ந்து பலர் எழுதுகிறார்கள். நீங்களும பங்கு கொள்ளலாம். கருத்தாடலும விவாதமுமே நமது இன்றைய தேவை..**

அணிவிப்பதையும் பாாத்து கவலையுற்றனர். இதனால் தமிழ் மக்களின் விடுதலைக்கு தமிழரசுக் கட்சியை நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தனர். கட்சி சார்பற்ற ஓர் அரசியல் அமைப்பைத் தோற்றுவிப்பதன் மூலமே தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்கலாம் எனக்கருதினர். இக்கருத்தினடிப்படையில் ஈழத் தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கினர். பிற்காலத்தில் நீண்ட காலம் சிறையிலிருந்த த. முத்துக்குமாரசுவாமி, ஆயுத இயக்கத்தின் முன்னோடியாக இருந்த உரும்பிராய் சிவகுமார் ஆகியோர் இவ்வமைப்பை தோற்று வித்தவர்களில் சிலராவர்.

இவ்வமைப்பு இரண்டு முக்கியமான போராட்டங்களை யாழ்ப்பாணத்தில் நடாத்தி இருந்தது. ஒன்று அக்காலத்தில் கல்வி அமைச்சினால் பாடசாலை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தப்பட்ட 'சியவச' சுவீப் ரிக்கற்றுக்கு எதிரான போராட்டம்.

மற்றையது: தமிழ் பல்கலைக் கழகம் திருமலையில் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவான போராட்டம்.

அக்காலப்பகுதியில் கல்வியமைச்சால் பாடசாலை மாணவர்களிடையே அறிமுகப் படுத்தப்பட்டிருந்த 'சியவச' சுவீப் ரிக்கற் விற்பனையால் கிடைக்கும் பணம் இலங்கையின் வசதியற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படும் எனக் கல்வியமைச்சால் கூறப்பட்டது. ஈழத் தமிழர் விடுதலை இயக்கம் அரசின் கடந்த கால கல்விப் பாரம்பரியத்தைச் சுட்டிக் காட்டி இச் சுவீப் ரிக்கற்றினால் கிடைக்கும் பணம் சிங்கள மாணவர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். தமிழ் மாணவர்களுக்குப் பயன்டுத்தப்படமாட்டாது. எனவே தமிழ் மாணவர்கள் இதனைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனக்கூறியது. கூறியதோடு நில்லாமல் மாணவர்களை இணைத்து அதற்கெதிரான போராட்டத்தையும் நடாத்த முன் வந்தது. 1968 இன் பிற்பகுதியில் இது தொடர்பாக இவ்வமைப்பினால் கொக்குவிலில் இருந்து ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டது. சியவச சுவீப் ரிக்கற்றும் இவ்வூர்வலத்தில் கொண்டுவரப்பட்டது. ஊர்வலத்தில் "சியவச ரிக்கற்றுகள் எங்களுக்கு வேண்டாம், மாணவர்களே, மக்களே 'சியவச' ரிக்கற்றுகளைப் பகிஷ்கரியுங்கள் என்ற கோஷங்கள் முன்வைக்கப்பட்டன. ஊர்வலத்தின் முடிவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் பிலிப் மருத்துவமனைக்கு அருகிலுள்ள மைதானத்தில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்ட சுவீப் ரிக்கற்றுகள் எரிக்கப்பட்டதோடு அங்கு பொதுக்கூட்டமும் நடாத்தப்பட்டது.

பொதுக்கூட்டத்தில் தமிழர்களின் ஒடுக்குமுறைக்கெதிராகத் தொடர்ச்சியாகப் போராட வேண்டுமென்றும் கட்சிசார்பற்ற முறையில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்தின் இரண்டாவது போராட்டம் 1969 இல் நடைபெற்றது அப்போராட்டம் உருவாக்கப்பட இருக்கின்ற தமிழர்களுக்கான பல்கலைக்கழகத்தினை எங்கே உருவாக்குதல் வேண்டும் என்ற பிரச்சினை பற்றியதாகும். அக்காலத்தில் தமிழர்களுக்கென ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கித் தரலாமென்ற அரசின் அறிவிப்பை அடுத்து அதனை எங்கே உருவாக்குவது என்பது தொடர்பாக தமிழ்தலைவர்களிடையே இரண்டு விதமான கருத்துக்கள் இடம் பெற்றன. தமிழரசுக் கட்சியினர் வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்ற பிரதேசமாக திருமலை மாவட்டம் இருப்பதனால் திருமலையில் பல்கலைக் கழகம் அமைக்கப்படல் வேண்டும் என்றும் அப்பல்கலைக் கழகம் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற அனைத்து மக்களையும் இணைக்கின்ற வகையில் தமிழ்ப்பல்கலைக் கழகம் என்ற பெயரில் இருக்க வேண்டும் எனவும் கூறினர்.

இதற்கு மாறாக தமிழ் காங்கிரஸ் கட்சியினர் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட வேண்டும் எனவும், அதுவும் ஒரு இந்துப் பல்கலைக் கழகம் என்ற பெயரில் இருக்க வேண்டும் எனவும் கூறினர். இவ்விரு சாராரின் கருத்துக்களும் அன்று தமிழ் மக்களிடையே பல வாதப்பிரதி வாதங்களை ஏற்படுத்தின. யாழ்ப்பாணத்தில் இருந்த பலர் தமிழரசுக் கட்சியை ஆதரித்த போதும் அப்பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படுவதையும் அது ஒரு இந்துப் பல்கலைக் கழகமாக இருப்பதையுமே விரும்பினர். தமிழரசுக் கட்சியின் தீவிரத் தொண்டர்களும் தமிழ் மக்களின் பிரதேச ஒற்றுமையை விரும்புபவர்களும் மாத்திரம் அப்பல்கலைக் கழகத்தை திருமலையில் நிறுவ வேண்டும் என்றும் இல்லையேல் பிரதேச வேறு பாடுகள் தோன்றி வடக்கை கிழக்கில் இருந்து அந்நியப்படுத்தும் என்றும் கூறி அதை நிராகரித்தனர்.

ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தினரும் தமிழ்ப் பிரதேசத்தினதும், தமிழ் மக்களினதும் ஒற்றுமை கருதி பல்கலைக்கழகம் மதசார்பில்லாது தமிழ் பேசும் மக்களைக் குறிக்கும் வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகமாக இருக்க வேண்டும் என்றும் அது திருமலையில் அமைக்கப்பட வேண்டும் எனவும் கூறிய தமிழரசுக் கட்சியின் கருத்தையே ஆதரித்தனர். இல்லையேல் வடக்கு கிழக்கு மக்களை ஐக்கியப்பட வைக்காது பிரிக்க வேண்டும் என்ற அரசின் சூழ்ச்சிக்கு நாம் பலியாக நேரிடும் எனக்கருதினர். அத்தோடு நீறுபூத்த நெருப்பு போல யாழ்ப்பாணத்தவர் பற்றிய கிழக்கு மக்களுக்கு இருக்கும் அபிப்பிராயம் வளர்ச்சியடையும் எனவும் கருதினர்.

இக்கருத்தினடிப்படையில் இதற்கு ஆதரவாக ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தினர். இவ்வூர்வலம் திருநெல்வேலிச் சந்தியிலிருந்து ஆரம்பமானது. ஊர்வலத்தில் "யாழ்ப்பாணத்திற்கு வேண்டாம் பல்கலைக்கழகம், திருமலைக்கு வேண்டும் பல்கலைக் கழகம்", "திருமலையைக் காப்போம் தமிழர் ஒற்றுமை பேணுவோம்", "இந்துப் பல்கலைக் கழகமல்ல, தமிழ்ப்பல்கலைக் கழகமே எமக்கு வேண்டும்" என்ற கோஷங்கள் முன்வைக்கப்பட்டன. ஊர்வலம் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் முடிவுற்றது. அங்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அப்பொதுக்கூட்டத்தில் திருமலையில் பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதற்கான அவசியத்தை வற்புறுத்தியதோடு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படுவதனால் ஏற்படும் தீமைகளும் எடுத்துக் கூறப்பட்டது.

தொடர்ந்து 1970ம் ஆண்டு தேர்தல் வந்தது. பொதுவாகத் தேர்தல்கள் இளைஞர் அமைப்புகளைச் சிதறடிப்பது போன்று ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தையும் சிதறடித்தது. கட்சி சார்பற்று இயங்க வேண்டும் எனக் கூறிய இவ்வமை ப்பைச் சேர்ந்தவர்கள் இறுதியில் தேர்தல் சூழ்ச்சிக்குப் பலியானார் கள். இவ்வமைப்பில் இருந்த பெரும்பான்மையானோர் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குச் சார்பாகவும் சிலர் தமிழ் காங்கிரஸ் கட்சிக்குச் சார்பாகவும் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டனர்.

இவ்ஈழத்தமிழ் விடுதலை இயக்கம் குறுகியகாலம் மட்டும் இயங்கியிருந்தாலும் ஒரு சில போராட்டங்களை மட்டுமே நடாத்தியிருந்தாலும் இவ்வமைப்பும் அதன் போராட்டமும் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

கட்சி சார்பற்ற அமைப்பு என்ற வகையிலும், தமிழ் மக்களின் ஏகபோக கட்சியாக இருந்த தமிழரசுக் கட்சியை நிராகரித்து உருவாகிய அமைப்பு என்ற வகையிலும், தமிழரசுக் கட்சிக்கு வெளியேயான ஒரு அமைப்பினாலும் தமிழர் போராட்டத்தை நடாத்த முடியும் எனக் காட்டியது என்ற வகையிலும் இவ்வமைப்பு முக்கியம் வாய்ந்தாக விளங்குகின்றது. தமிழரசுக் கட்சி இல்லாமலே எங்களால் போராட்டங்களை நடாத்த முடியும் என்ற நம்பிக்கையை தமிழர் இளைஞர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இவ்வமைப்பு கொடுத்திருந்தது. இந்த வகையில் பின்னர் தோன்றிய தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் போன்ற அரசியல் இயக்கங்களுக்கும் அதனைத் தொடர்ந்து தோன்றிய ஆயுதம் தாங்கிய இயக்கங்களுக்கும் இவ்வமைப்பு முன்னோடியாக விளங்கியது.

தமிழரசுக் கட்சியின் அரசியல் வங்குறோத்து தளத்திலிருந்து தமிழ் மக்களை விடுவித்து தமிழர் விடுதலைப் போராட்டத்தை முனைப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஆரம்பப்படியாகவும் இவ்வமைப்பு விளங்கியது. இவ்வமைப்பினால் தொடக்கப்பட்ட தமிழரசுக் கட்சியிலிருந்து தமிழ் மக்களை விடுவிக்கும் போராட்டம் பல்வேறு தொடர்ச்சியான போராட்டங்களின் பின்னர் சுமார் எட்டு வருடங்களின் முடிவில் 1985 அளவிலேயே வெற்றியடைந்தது.

இளைஞர்களின் ஆயுத எழுச்சிக்கு முன்னால் நின்றுபிடிக்க முடி

அன்னபூரணி.

யாத வாய்வீச்சுத் தலைவர்கள் நாட்டை விட்டு ஓடும் அளவிற்கு அது வெற்றியடைந்திருந்தது. ஆனால் அவ்எட்டு வருட இடைக் காலங்களிலும் தமிழரசுக் கட்சியோடு மிகத் தீவிரமான போராட்டங்களை அவ்வப்போது தோன்றிய இளைஞர் அமைப்புக்கள் நடாத்தியிருந்தன. அக்காலங்களில் தனக்குப் போட்டியாகத் தோன்றிய அமைப்புக்களை நசுக்குவதற்கு அரசியல் ரீதியாக அல்லாமல் பலாத்கார ரீதியாகவும் அது முயன்றிருந்தது.

அது எவ்வாறு இம்முயற்சிகளை மேற்கொண்டது என்பதை அடுத்தடுத்த அமைப்புக்களை ஆராயும் போது விளக்குவோம்.

இவ்வமைப்பு நடாத்திய இரு போராட்டங்களும் தமிழரசுக் கட்சி அரசுடன் கொஞ்சிக் குலாவி மந்திரிப்பதவியையும் எடுத்து சுகபோகம் அனுபவித்த வேளையில் நடாத்தப்பட்டது என்ற வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. அதிலும் முதலாவதாக நடாத்தப்பட்ட போராட்டம் அமைச்சரவையின் முடிவுகளில் ஒன்றான 'சியவச' சுவீப் ரிக்கற்றுக்கெதிரான போராட்டம் என்ற வகையில் அரசுக்கெதிரான போராட்டமாக விளங்கியது. இப் போராட்டம் அரசினுடைய இனப் பாரபட்சத்தை அம்பலப்படுத்தியதோடு மாணவர்களையும், இளைஞர்களையும் ஒருங்கே இணைத்துக் கொண்ட போராட்டமாக விளங்கியது. ஊர்வலத்தின் முடிவில் 'சியவச ரிக்கற்றை எரித்து எதிர்ப்புக்காட்டியமை எவ்வகைப் போராட்டத்தையும் எம்மால் நடாத்த முடியும் என்பதை வெளிக்காட்டியது. ஏனெனில் தமிழரசுக் கட்சியின் போராட்ட வரலாற்றுக் காலகட்டங்களில் அமைச்சரவை முடிவுகளையோ, பாராளுமன்ற முடிவுகளையோ அது எரிப்பதற்கு அஞ்சியிருந்தது.

இவர்களுடைய இரண்டாவது போராட்டம் தமிழ் மக்களின் பிரதேச ஒற்றுமையை வலியுறுத்தியது என்ற வகையிலும் யாழ்ப்பாண மனோபாவத்தை எதிர்த்தமை என்ற வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகிறது. யாழ்ப்பாணத்தவர் என்றால் "குறைந்த செலவில் கூடிய அலுவல்கள் பார்ப்பவர்கள்", "நப்பிகள்", "சுயநலமிகள்", தங்கள் சுய நலன்களுக்காக ஏனைய பிரதேச மக்களைச் சுரண்டுபவர்கள், "எல்லோருடைய நலன்களையும் தாம் மட்டும் பெறத் துடிப்பவர்கள் என்கிற அபிப்பிராயங்கள் பொதுவாக ஏனைய பிரதேசத்து மக்களிடத்தேயும், மலையகத்திலும் பரவியிருந்தன. கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் என்பவற்றில் ஏனைய பிரதேச மக்களை விட உயர்ந்த நிலையில் காணப்பட்டமை ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் வர்த்தகம், பயிர்ச் செய்கை என்பனவற்றில் இவர்களும் ஈடுபட்டிருந்தமை அவ்விடங்களில் தமது பொருளாதா

பக்கம் 10 →

நன்றி - நூலகத்திட்டம்



ஓவியராகவும் கேலிச் சித்திரக் காரராகவும், சங்கீதகாரராகவும் திரைப்படக் கலைஞராகவும் மிளிர்ந்து மார்ச் மாதம் 15 ம் திகதி காலமான ஜீ. அரவிந்தன் ஒரு முறை சொன்னார்.

"எவ்வகையான செய்திகளையும் சொல்லாமலேயே என்னுடைய திரைப்படங்களை நான் எடுக்கக் கூடும்... செய்தியை மட்டும் தான் நீங்கள் தேடுவீர்களானால் ஏன் திரைப்படத்தைப் பயன்படுத்த வேண்டும்? நீங்கள் துண்டுப் பிர

சுரங்களை அச்சிட்டு விநியோகிக்கலாம்! அது மிகவும் பயன் படக்கூடியதாக இருக்குமே!"

மௌனத்தையே தனது பிரதானமான மொழியாக வாழ்விலும் பேணிய அரவிந்தன் என்கிற கலைஞன் இன்று எம்மிடை இல்லை. எழுபதுகளில் இந்தியத் திரைப்படத் துறையின் அசாதாரணமான நெறியாளர்களுள் ஒருவராக அரவிந்தன் எழுந்தார். அவரும் அடூர் கோபாலகிருஷ்ணனும் மலையாளத் திரைப்படங்களை உலக அரங்கிற்குக் கொண்டு சென்றார்கள் என்பது ஒரு மிகைப் படுத்தப்பட்ட கூற்று அன்று. அரவிந்தனுடைய திரைச் சிருஷ்டிகளில் என்னால் மறக்க முடியாதது காஞ்சன சீதா, தம்பு மற்றும் சிதம்பரம் ஆகிய படங்கள்.

அரவிந்தனைப் போலவே ஓவியம், சங்கீதம், கேலிச் சித்திரம் போன்ற பல்வேறு கலைத் தளங்களிலும் சஞ்சரித்த இன்னொருவர் சத்யஜித்ரே. இந்தியத் திரைத் துறையிலேயே இவ்வகையிலும் அரவிந்தனும் சத்தியஜித் ரேயும் மாறுபட்டவர்கள்.

தன்னுடைய விஞ்ஞான மாணி (B.Sc) பட்டத்தைத் தாவரவியலில் பெற்றுக் கொண்டு, கேரளாவில் கோழிக் கோடு எனும் இடத்தில் ரப்பர்த் தோட்டம் ஒன்றில் மேலதிகாரியாக அரவிந்தன் ஆரம்பத்தில் பணியாற்றினார். அவ் வேளையிலேயே, பிரபலமான மலையாளத் திரையில் மாத்ரு பூமி யில் "சிறிய மனிதர்களும் பெரிய உலகமும்" என்ற தலைப்பில் கேலிச் சித்திரத் தொடரொன்றையும் வரைய ஆரம்பித்தார். உத்தராயணம் அரவிந்தனுடைய முதல் படமாகும். உத்தராயணத்தில், அரவிந்தன் ஒரு சுதந்திரப் போராட்ட வீரனின் கதையையும் கஷ்டங்களையும் சித்திரிக்கிறார். அவருடைய நண்பர்களும் சகபாடிகளும் அரசியல் அதிகாரத்திற்கு மேலேறி விட்ட போது பங்கு கொள்ள முடியாமல் விலகி, ஒதுங்கி உழலும் உண்மையான போராட்டக்காரனை அரவிந்தன் திரையில் தீட்டினார். உத்தராயணம் அதிக பணச் செலவின்றித் தயாரிக்கப்பட்ட படம், இரண்டு தேசிய விருதுகளை அது அரவிந்தனுக்குப் பெற்றுத் தந்தது. அவற்றுளொன்று தேசிய ஒருமைப் பாட்டிற்கானதாகும்.

அவருடைய அடுத்த படம் காஞ்சன சீதா (1977) ஆகும்.

காஞ்சன சீதாவில் இயற்கையே பாத்திரமாயிற்று அதற்கடுத்ததாக தம்பு (1978) எனும் படத்தை சேர்க்கஸ் தொழிலாளர்கள் பற்றி எடுத்தார். தொடர்ந்து கும்மட்டி (1979) எஸதப்பன் (1979) ஆகிய படங்களை எடுத்தார். குறிப்பாக எஸதப்பன், மீனவர்கள் பின்னணி, வாழ்வு நம்பிக்கைகள் பற்றியதாக இருந்தது. தான் மிகவும் ஈடுபட்டு எடுத்த படங்களில் அதுவுமொன்று என்று அரவிந்தனே ஒரு முறை என்னிடம் தெரிவித்திருக்கிறார். போக்கு வெய்யில் (1981) அரவிந்தனுடைய படைப்புகளிலேயே உன்னதமானதும் அற்புதமானதுமாகும். புல்லாங்குழலின் சங்கீதத்தை உயர் சிலிர்க்க வைக்கும் காட்சிப் படிமங்களுடன் போக்கு வெயிலில் அரவிந்தன் பிழிந்து கொடுத்திருக்கிறார்.

அவருடைய சிதம்பரம் (1984) தமிழ்-மலையாளம் இருமொழிப் படமாகும். காலஞ்சென்ற ஸ்மிதா பட்டேல் பிரதான பாத்திரம் ஏற்று சிதம்பரத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. குற்றம்..குற்ற உணர்வு, மரணம், வாழ்வின் புத்துயிர்ப்பு போன்ற விஷயங்களை நேர்த்தியாக அரவிந்தன் சிதம்பரத்தில் அலசியுள்ளார். முக்கிய பாத்திரமான முனியாண்டி (சிறீநிவாசன்), பழமையில் ஊறிய ஒரு தமிழ் கூலி உழைப்பாளி.

பண்ணையொன்றில் மாடுகள் பராமரிப்பவனாக இருக்கிறான். சங்கரன் (கோபி) முனியாண்டியின் அலுவலக மேலதிகாரி, ஜேக்கப் (மோகன் தாஸ்) கள மேலதிகாரி. சங்கரன் புகைப்படம் பிடிப்பதிலும் ஆர்வமுள்ளவன். முனியாண்டியுடன் நட்புடன் பழகுகிற அந்த வேளை தொழில் விஷயங்களைத் தனித்தே கறாராகப் பேணுகிறான். ஆனால் ஜேக்கப் அப்படியல்ல. கர்வமும், பெருமையும் பிடித்தவன் மட்டுமல்லாது தொழிலாளர்களுடன் அறவே பழகுவதில்லை. 'ஒழுக்கம்' பற்றிய கருத்துக்கள் எதுவும் ஜேக்கப்பிடம் கிடையாது.


முனியாண்டி, சிவகாமியைத் (ஸ்மிதா பட்டேல்) திருமணம் செய்கிறான். சிவகாமியும் பண்ணைக்கு வருகிறாள். தமிழ் நாட்டின் சிதம்பரத்திலிருந்து வந்த சிவகாமிக்கு கேரளத்தின் பசுமையும் அழகும் வேறொரு உலகமாக இருந்தது. ஆரம்பத்தில் செழிப்பாக வளர்ந்திருந்த பெரிய மாடுகளும் ஜேக்கப்பின் மோட்டார் சைக்கிள் சத்தமும் கூட சிவகாமிக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாகவே இருந்தது. தன்னுள்ளேயே ஒடுங்கிப் போகிறாள். எனினும் மெல்ல மெல்ல இயற்கை அழகில் ஈடுபட்டுக் கேரளவாழ்விற்குள் வருகிறாள். உள்ளடங்கியிருந்த உணர்வுகள் மெல்ல மேலெழுகின்றன.

சங்கரனைச் சந்திக்கிற சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படுவது மட்டுமல்லாமல் அவனுடைய நளினமான இயல்பு நோக்கிச் சிவகாமி மெல்ல மெல்ல ஈர்க்கப்படுகிறாள். சிவகாமிக்குத் தேவையான காதலையும் பிரேமையையும் முனியாண்டி தரத் தவறி விடுகிறான் என்பதும் சிவகாமியின் உள்ளார்ந்த தனிமையை அகலிக்கிறது. (பின்னணியில் ஒலிக்கும் 'தங்கரத்தினமே' எனும் அழகிய தமிழ் நாட்டுப் பாடல் ஒன்றின் மூலம் அரவிந்தன் அற்புதமாக இந்த உணர்வை எழுப்புகிறார்) ஒரு சமயம் முனியாண்டி, சிவகாமிக்கும் – சங்கரனுக்குமான நெருக்கத்தை உணர்ந்து விடுகிறான். முனியாண்டிக்கோ நல்ல நண்பன் ஒருவனின் இந்தத் 'துரோகம்' தாங்க வொண்ணாததாக இருந்தது. சிவகாமியைக் கொன்று விட்டுத் தானும் தூக்குப் போட்டு கொண்டு செத்து விடுகிறான். சிவகாமியின் மரணம் குறிப்பாகவே உணர்த்தப்படுகிறது. துயருற்ற சங்கரன் பண்ணையை விட்டு வெளியேறிவிடுகிறான். அரவிந்தனின் விவரணப் படங்களும் (documentary) பல புகழ் பெற்றவை ஜே. கிருஷ்ணமூர்த்தியைப் பற்றிய அவரது 'தனித்து நடக்கும் ஒரு தரிசனன் (The seer who walks alone) 1985, மாறாட்டம் (1989), சஹாஜா போன்றன முக்கியமானவை.

சஹாஜா, மொஸ்கோவில் நடைபெற்ற இந்திய விழாவின் போது காண்பிக்கப்பட இருந்தது. எனினும் பின்னர் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டு விட்டது.

அரவிந்தனுடைய படங்கள் எதுவுமே இலங்கையில் திரையிடப் படவில்லை. எனினும் இந்தியாவில் நான் கழித்த காலங்களில் அரவிந்தனுடைய படங்களைப் பார்க்க கிடைத்தமை உண்மையிலேயே அருமையான வாய்ப்புத் தான். அரவிந்தனுடைய நினைவும், இயல்பும் என்னோடு எப்போதும் இருப்பதற்கு இன்னொரு வலிமையான காரணமும் உண்டு. மார்டின் விக்கிரம சிங்ஹவின் நாவல்களிலும், திஸ்ஸ அபே சேகராவின் 'தாமரைப் பூவின் வாழ்' என்ற படத்திலும் மௌனமே உருவான பாத்திரங்கள் வரும் – அரவிந்தனைப் போல. செல்லுலோயிட் சுருள்களில் உன்னதம் கண்ட ஒரு மாமனிதன் நம்மிடை இல்லை என்பது ஒரு தவிர்த்திருக்கக் கூடிய துயரமா?

- சிறியந்த வஸ்பொல -



# மௌனத்தின் வித்தகன்

# ஜீ. அரவிந்தன்

## தேசிய விடுதலைப் போராட்டம்....

ரத்தை வளர்ப்பதற்காக சகல குறுக்கு வழிகளையும் கையாளத் தொடங்கியமை அவ்விடங்களில் ஈன இரக்கமற்ற சுரண்டல்களை மேற்கொண்டமை ஏனைய பிரதேசத்து மக்களைத் தன்னை விட குறைவாகக் கருதுதல், தமிழர் சம்பந்தமான எல்லா விடயங்களிலும் தன்னாதிக்கத்தைச் செலுத்துதல் போன்ற காரணிகளால் யாழ்ப்பாணத்தவர்கள் பற்றி ஒரு கசப்பான அபிப்பிராயம் ஏனைய பிரதேசத்து மக்களிடையே வளர்ந்திருந்தது. இது தொடர்பாக வன்னிப் பிரதேசத்தில் யாழ்ப்பாணத்தவரின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்காக யாழ் ஒழிப்புச் சங்கங்கள் போன்ற அமைப்புக்களும் நிறுவப்பட்டிருந்தன. பிற்காலத்தில் வவுனியா பாராளுமன்ற உறுப்பினராக இருந்த த. சிவசிதம்பரம் இச்சபையின் தலைவராக இருந்தவர் என் பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தவர்களின் இத்தகைய இயல்புகளின் அடிப்படையிலேயே தமிழர்களின் பிரச்சினையின் பக்கம் நின்று போராடும் அமைப்பாக தமிழரசுக் கட்சி இருந்ததனால் அதனை ஆதரித்த அதே வேளை பல்கலைக்கழகப் பிரச்சினையில் தமிழ்க் காங்கிரஸின் கொள்கையை ஆதரித்தனர். அதனால் பெரும்பாலான யாழ்ப்பாணத்தவர் யாழப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதையே விரும்பினர்.

ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தவரது இப்போராட்டம் யாழ்ப்பாணத்து மனோபாவத்திற்கு பலத்த அடியைக் கொடுத்ததோடு பிரதேச ரீதியாக சிந்திக்கின்ற சிந்தனை மாறி மொத்தத் தேசிய இனம் என்ற வகையில் சிந்திக்கிற ஒரு கூட்டம் யாழ்ப்பாணத்தவரிடையே வளர்ந்து வருகிறது என்பதையும் அடையாளம் காட்டியது. இக்கூட்டம் மிகவும் பலத்த போராட்டத்தின் மத்

தியிலேயே இன்றும் கூடவளர்ந்து வருகிறது. ஏனெனில் யாழ்ப்பாணத்து மனோபாவத்திற்கெதிராகப் போராடுவதென்பது இலகுவான காரியமல்ல. இப்போராட்டம் முடிந்த பின்னர் யாழ்ப்பாணத்துக்கா? பல்கலைக் கழகம் வேண்டாம் என்று கூறுகிறீர்கள் எனக் கேட்டு அவர்களது குடும்பத்தினராலேயே கண்டிக்கப்பட்ட நிகழ்வு இப்போராட்டத்தின் கடினத் தன்மையை புலப்படுத்துகின்றது. இன்றும் கூட விடுதலை இயக்கங்களில் யாழ்ப்பாண ஆதிக்கம் காணப்படுவதற்கு, முழுமையாக இல்லாவிட்டாலும் ஒரு பகுதியாவதாதல் யாழ்ப்பாண மனோபாவம் கொள்ளப்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது.

இவ்வமைப்பு இவ்வாறு முற்போக்கான வகையில் போராட்டங்களை நடாத்தியிருந்தாலும், போராட்டம் பற்றிய தூரநோக்கின்மை, தமிழரசுக் கட்சியை வர்க்க ரீதியாகப் பார்க்கத் தவறியமை, தேர்தல்களையும் அதன் விளைவுகளையும் பற்றிய சரியான கணிப்பீடின்மை, மத்திய தர வர்க்க மனோபாவம் போன்றவை காரணமாக அமைப்பையோ போராட்டத்தையோ தொடர்ச்சியாகக் கொண்டு நடாத்த இவர்களால் முடியவில்லை. இதனால் தேர்தல் வந்ததுமே தேர்தல் மாயைக்குள் விழுந்து அமைப்பை சிதறடித்தார்கள். எனினும் இதில் சிலர் தாம் பெற்றுக் கொண்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு 1970 களின் பிற்பகுதியில் தோற்றம் பெற்ற மாணவர் பேரவையின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தார்கள்.

இன்னும் வரும்!

நன்றி - நூலகத்திட்டம்



# கலைஞனும் அரசியலும்

## கத்தாருடன் ஒரு பேட்டி

சுமார் ஐந்தாண்டுத் தலைமறைவு வாழ்க்கைக்குப் பின்னர் தமிழகம் முழுமையும் ஜனநாட்டிய மண்டலி மற்றும் மக்கள் கலை மன்றத்துடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த நக்சல்பாரிக் கலைஞர் தோழர் கத்தரைச் சென்ற ஒகஸ்டு 31ந் தேதியன்று திருச்சியில் காலை 11 மணிக்கு, அன்று மாலை நிகழ்ச்சி நடைபெறவிருந்த அரங்கில் சந்தித்தோம். எள்ளளவும் சாதுரியம், நளினம், நெளிவு, சுழிவு, அலங்காரமற்ற கச்சா ஆங்கிலத்தில் பதில்கள் பளீர் பளீரெனத் தெறித்தன. நிறப்பிரிகையின் சார்பில் பேட்டியில் கலந்து கொண்டவர்கள்: அ.மா., ரவி. கூட இருந்தவர்கள்: கிராமியன் (மக்கள் கல்வி இயக்கம்) கண்ணன் (முற்போக்கு இளைஞர் அணி) ராஜன் (திருச்சி சினி ஃபாரம்)

*ரஷ்யா, சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனமாகப் பரிசீலித்தால் முதலாளியத்தை நோக்கிய பின்வாங்கல் என்பது முதலில் கலாசாரத் தளத்தில் தொடங்குவது தெரிகிறது. ரஷ்ய அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்ட மாவோ, கலாசாரப் புரட்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். ஆனால் சீனாவிலும் கூட மாவோவிற்குப் பின் மேற்கத்திய நுகர்பொருட் கலாசாரத்தை நோக்கிய சரிவைக் காண்கிறோம். புரட்சிக்கு முந்திய மூன்றாம் உலக நாடொன்றில் கலாசாரத்தளத்தில் போராடிக் கொண்டிருக்கும் போராளி என்கிற வகையில் நமது உடனடிப் பணி என்ன எனக் கருதுகிறீர்கள்? மக்கள் சனநாயகப் புரட்சி ஒன்றிற்கான மக்களைத் திரட்டும் கருவியாக மட்டுமே கலாசாரப் பணியைக் கருதுகிறீர்களா? இல்லை, மாற்றுக் கலாசாரம் ஒன்றை உருவாக்குவது உங்கள் நோக்கமா?*

கலாசாரம் மனித மனத்தில் ஏற்படுத்தும் விளைவு அதிசயிக்கத்தக்கது. துப்பாக்கிக் குண்டு மார்பைத் துளைக்கிறது. கலாசாரமோ நமது சிந்தனையை, மூளையைத் துளைத்து விடுகிறது. எனவேதான் ஒவ்வொரு அரசும் கலாசாரத்தை முழுமையாகத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள விரும்புகிறது.

பொருளாதார , அடித்தளத்தின் வெறும் பிரதிபலிப்புத்தான் கலாசாரம். எனினும் வெறும் பொருளாதார மாற்றமே கலாசார மாற்றத்தை ஏற்படுத்தி விடுவதில்லை. மக்களின் சிந்தனை புரட்சிகரமாக மாற்றப்படாவிட்டால் பொருளாதார மாற்றம் இருந்துங்கூடப் பின்னோக்கிய சரிவு சாத்தியம். எனவேதான் கலாசாரப் புரட்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் மாபெரும் தலைவர் மாவோ. அதன் மூலம் அங்கே பல நன்மைகள் விளைந்தன. சில தவறுகளும் நிகழ்ந்தன. எந்தப் புதிய முயற்சிதான் குழப்பங்களில்லாமல் இருக்கும்? ஆனாலும் கூட விளைந்த நன்மைகள்தான் அதிகம். "தலைமையகத்தைத் தகர்த்தெறியுங்கள்" என்ற முழக்கத்தை நாம் மறந்துவிட முடியாது.

முதன் முதலில் விடுதலையடைந்த ரஷ்யாவிற்கு இதர நாடுகளின் விடுதலைக்கு உதவி செய்யும் பெரும் பொறுப்பு இருந்தது. ஆனால் இந்தக் கடமையை மறந்தது மட்டுமின்றி உலகப் புரட்சியைக் காட்டியும் கொடுத்தது. சமாதான சக வாழ்வு என்ற பெயரில் வர்க்கப் போராட்டத்தையும் கைவிட்டது. இது எல்லா நாடுகளையும் பாதித்துவிட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் வர்க்கப் போராட்டம் ஏதுமின்றிச் செம்படையின் உதவியோடு விடுதலை பெற்றன. இந்த நாடுகளில் சமூகப் புரட்சி என்பது கலாசாரப் புரட்சியை நோக்கிச் சென்றதேயில்லை. எனவே இங்கெல்லாம் பின்நோக்கிய சரிவு மிகவும் எளிதாகியது. இந்த நாடுகள் அனைத்திலும் முதலாளிகள் சோசலிசக் கட்டுமானத்தைத் தகர்ப்பதற்குக் கலாசாரத் தளத்தைச் சரியாகப் பயன்படுத்தி விட்டார்கள். இன்று இந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை மக்களின் வெற்றியாகத்தான் பார்க்க வேண்டும். சனநாயகத்திற்கான இப்போராட்டங்களை நாம் ஆதரித்தே ஆகவேண்டும்.

நக்சல்பாரி இயக்கம் தனது தொடக்கக் காலத்தில் வெகுசன இயக்கங்கள் தேவையில்லை என்ற திரிபுப் பாதையை மேற்கொண்டிருந்த போதிலும் ஆந்திராவைப் பொறுத்த மட்டில் கலாசாரத் தளத்தில் ஒரு தன்னியல்பான வளர்ச்சி இருந்து வந்திருக்கிறது. சுப்பாராவ் பாணிக்கிரகி எங்கள் கலாசார இயக்கத்தின் முன்னோடி. சிரீகாகுளம் போராட்டத்தில் ஏற்பட்ட தேக்கத்திற்குப் பிறகு புரட்சிகர எழுத்தாளர் சங்கம், ஜனநாட்டிய மண்டலி ஆகியவை உருவாக்கப்பட்டன. அரசியல் இயக்கம் தீவிரப்படும் போது கலாசார இயக்கம் தேவைப்படுகிறது; தொய்வுபடும் போதும் தேவைப்படுகிறது. குறிப்பாகத் தலைமறைவுக் கட்சிகளில் கலாசார இயக்கத்தின் பங்கு மிக மிக முக்கியம். மூன்றாம் உலக நாடுகளில் மக்களிடம் செய்தியை எடுத்துச் செல்ல கலாசார இயக்கம் மிக மிக அவசியம். புரட்சிகர இயக்கங்கள் மட்டுமல்ல, முற்போக்கான இயக்கங்களெல்லாம் கலாசாரப் படையின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு ஒரு பாடகரையாவது உருவாக்குங்கள். சாத்தியமிருந்தால் இருவர் கொண்ட குழு அல்லது மூவர்.....

*இப்படி கட்சியுடன் உங்களது அனுபவம் எப்படி? உலகம் பூராவும் இத்தகைய பிரச்சினைகள் இருந்ததற்கான பொதுவான காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?*

சுவையான ஆனால் சிக்கலான கேள்வி. அறிவாளிகளுக்கும் கட்சிக்குமிடையேயான பொதுவான பிரச்சினைதான் நீங்கள் எழுப்பியுள்ளது. வரலாறு முழுமையும் பாருங்களேன். அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எல்லோரையும் அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவே முயல்கிறது, வைத்துக் கொள்கிறது. ஆனால், அதே சமயத்தில் இவ்வாறு கட்டுப்படுத்தப்படாத மக்கள் கலையும் இலக்கியமும் கூடவே இருக்கத்தான் செய்கின்றன. இதனையும் ஆட்சியாளர்கள் விட்டு வைப்பதில்லை. மக்கள் வடிவங்களுக்குள் தங்கள் உள்ளடக்கத்தை இராமாயணம்/மகாபாரதம் போன்றவை மூலமாகத் திணித்து விடுகின்றனர். எனினும் இந்த அரசமைப்பிற்கெதிரான போராட்டங்களும் கலை இலக்கியங்கள் மூலமாகத்தான் வெளிப்படுகின்றன.

ஒரு புரட்சிகர அரசு உருவாகும் போதும் இந்தப் பிரச்சினை எழுந்து விடுகிறது. அதுவும் கலைஞர்களைப் புரட்சிகர நோக்கிற்காகக் கட்டுக்குள் வைக்க விரும்புகிறது. கட்சியா, கலாசார இயக்கமா, எது முக்கியம்? ஆந்திரத்தின் அக்கினிக் குஞ்சு என்றெல்லாம் என்னை விளம்பரப் படுத்தியுள்ளீர்கள். ஆனால் இந்த நிகழ்ச்சியைக் கட்சிதானே ஏற்பாடு செய்ய முடிந்திருக்கிறது? கட்சியே முன்னோடிப்படை, கட்சியே எல்லாவற்றையும்விட உயர்ந்தது.

கட்சிக்கும் கலாசார அமைப்பிற்கும் வேறுபாடுகள் இருக்கலாம், முரண்கள் இருக்கலாம், ஆனால் இவை அனைத்தும் நட்பு முரண்பாடுகளே. கார்க்கிக்கும் லெனினுக்குமுள்ள முரண்பாடு அப்படிப்பட்டதுதான். உண்மையில் இந்த முரண்பாடு கொள்கைக்கும் நடைமுறைக்கும் சொல்லுக்கும் செயலுக்குமுள்ளமுரண்பாடுதான். ஆயிரமாயிரம் விஷயங்களைச் சொல்லிவிடலாம்: சொன்னதைச் செய்து காட்ட வேண்டும்.

ஆந்திராவில் இந்தப் பிரச்சினையை நாங்கள் பெரிதும் தீர்த்துவிட்டோம். நடைமுறையின் மூலமாகவே நாங்கள் இதைத் தீர்த்திருக்கிறோம். எப்போதுமே நட்பு முரண்கள் நடைமுறையில்தான் தீர்க்கப்படுகின்றன.

எழுத்தாளன் அகவயமாய் வாழ்பவன் புரட்சியாளனோ புறவயமாய் வாழ்வைப் பார்ப்பவன். புத்தகங்களைக் குவித்துவைத்துக் கொண்டு குழம்பிக் கிடக்கும் புத்திஜீவிகள் நிறையப் பேரை நான் பார்த்திருக்றேன். ஒரு குடிசை, ஒரு தொழிற்சாலை இங்கெல்லாம் நீ போயிருக்கிறாயா? போட்டிருக்கும் சட்டையைக் கூட உன்னால் தியாகம் செய்ய முடியாது. ஆனால் இல்லாத தத்துவமெல்லாம் பேசுவாய். நக்சல்பாரிகளை விமர்சிப்பாய். தமிழரசன் மக்களைத் திரட்டாமல் கொள்ளையடித்தார் என்பாய். இதைச் சொல்ல உனக்கு என்ன தகுதி இருக்கிறது? தமிழரசன் ஒரு மாபெரும் தியாகி. இந்தத் தியாகங்களை நாம் முதன்மைப் படுத்த வேண்டும்.

கார்க்கி பெரிய ஆளாக இருக்கலாம். ஆனால் இறுதியில் அவர் கட்சிக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். லெனின்தான் இறுதியில் வென்றவர்.

*கடந்த பத்தாண்டுகளில் இந்தியா முழுமையும் நக்சலைட் இயக்கத்தில் ஒரு தொய்வு இருக்கிறது. மாநில அரசின் கடுமையான அடக்கு முறையை எதிர்கொண்டுங்கூட ஆந்திர மக்கள் குழு இத்தகைய தொய்வைச் சந்திக்காதது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த வெற்றிக்குக் காரணமாய் நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?*

இந்தியா முழுமையும் நக்சல் இயக்கத்தில் ஒரு தொய்வு ஏற்பட்டுள்ளது என்கிற கருத்தை நான் ஒப்புக் கொள்ளவில்லை. ஜோதிபாசுவிற்கு எதிராக ஏழு அல்லது எட்டு சந்தால்கள் கிளர்ச்சி செய்ததோடு நக்சல் இயக்கம் பிறப்பெடுத்தது. அந்தப் பொறி இன்று காட்டுத்தீயாய் வளர்ந்திருக்கிறது. கோட்பாட்டு ரீதியான போதாமையாலும் தலைமைகளின் திரிபுகளாலும் இயக்கம் இன்று சிதறுண்டு கிடப்பது உண்மைதான்.

ஆனால் நக்சல்பாரியின் செய்தி இன்று இந்தியா முழுமையும் பரவியுள்ளது. திருச்சியில் ஒரு அறையில் உட்கார்ந்துகொண்டு நாம் நக்சல்பாரிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கவில்லையா? இன்று பிளவுண்டு கிடக்கும் நக்சலைட் குழுக்கள் அனைத்தையும் இரு பிரிவுக்குள் அடக்கலாம்.




1) தேர்தலில் பங்கேற்பவை.
2) தேர்தலைப் புறக்கணிப்பவை.
இது ஐக்கிய முன்னணிக்கான ஒரு கால கட்டம்.

*கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் சனநாயகப் போராட்டங்களை எப்படி ஆதரிக்கிறீர்கள்? அவர்கள் கோருவது முதலாளியச் சனநாயகம் அல்லவா?*

சனநாயகத்திற்கான அந்தப் போராட்டங்களை நாம் ஆதரித்துத்தான் ஆகவேண்டும். திரிபுவாதத்திற்கெதிரான நேரெதிர் பதில் அது. பொதுவுடைமையின் பெயராலேயே அங்கு எல்லாக் கொடுமையும் நடந்தது. எனவே அதற்கான எதிர்ப்பு முதலாளியக் கோரிக்கை வடிவில் இருப்பது இயற்கைதான். இதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு மக்கள் பொறுப்பல்ல. அங்குள்ள பொதுவுடைமைக் கட்சிகள்தான் பொறுப்பு. எதிர் காலத்தில் அச் சமூகங்கள் எப்படி இருக்கும் என்று இப்போது நாம் ஆருடம் சொல்ல முடியாது. ஒன்று மட்டும் உறுதி. நிச்சயம் போராட்டங்கள் தொடரும்.

*உலகம் பூராவிலும் வரலாறு முழுமையும் கட்சிக்கும் கலாசார அமைப்பிற்குமிடையே உறவு எப்போதுமே சரியாக இருந்ததில்லை. இதற்குப் பல எடுத்துக் காட்டுகள் சொல்ல முடியும். லெனினுக்கும் கார்க்கிக்கும் இடையே இருந்த பிரச்சினைகள், ஸ்டாலின் காலத்தில் ஏராளமான எழுத்தாளர் கள் தொல்லைக்குள்ளாக்கப்பட்டது, சீனத்தில் அய்கிங்கின் பாடல்கள் தடைசெய்யப்பட்டது கியூபாவில் பாடில்லா சிறையில் அடைக்கப்பட் டது..*

ஆந்திராவைப் பொறுத்தமட்டில் மகத்தான தெலுங்கானாப் போராட்டம் நடந்த மண் இது. அதனால்தான் திரிபுவாதம் இன்றளவும் இங்கே தலைதூக்க முடியவில்லை. அவர்களுடைய ஆட்சி இங்கே உருவாகாதது நல்லதென்றே சொல்ல வேண்டும். மார்க்சியத்தின் பெயராலேயே உள்ள எதிரிதான் ரொம்பவும் ஆபத்தானவன். எங்கள் கட்சியின் வெற்றி குறித்துச் சொல்வதானால்,

i) விமர்சனம், சுய விமர்சனம் என்ற ஆயுதத்தை மிகச் சரியாகப், பயன்படுத்தியவர்கள் நாங்கள். இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட எங்களின் போர்த் தந்திரம் மற்றும் நடைமுறைத் தந்திரம் பற்றிய நூல் ஒரு மிகச் சிறந்த ஆவணம். சாருபாபு காலத்திலேயே, அவரிடமே "அழித்தொழிப்புக் கொள்கை" "மற்றும் சீனத்தின் தலைவர் நமது தலைவர்" என்கிற முழக்கம் போன்றவற்றையெல்லாம் விமர்சித்திருப்பவர்கள் நாங்கள்.

ii) கட்சி என்பது வெறும் முன்னோடிப்படைதான். மக்கள்தான் போராட வேண்டும். அந்த வகையில் நாங்கள் முழுமையாய் மக்களைச் சார்ந்திருந்தோம். அரசைச் சவாலுக்கழைக்கும் எந்த ஒரு இயக்கமும் கவனமான முன்னோக்கிய பார்வையுடன் செயல்பட வேண்டும். இன்றில்லாவிட்டால் நாளை அரசின் அடக்குமுறையை நாம் எதிர்

→ 12 ம் பக்கம்.

நன்றி - நூலகத்திட்டம்

# சரிநிகர்

## எத்தனை காலம்தான்...

தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஒரு போர்நிறுத்தம் அறிவிக்கப்படும் என்று பரவலாக எதிர்பார்க்கபபட்டது.

ஆனால் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, புத்தாண்டுப் பிறப்பு அன்றும் பரவலான தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன. காரைநகர் கடற்படை முகாம் மீதான தாக்குதல் முயற்சியின் போதும், எதிர்த் தாக்குதலின் போதும் ஐநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். வீடுகள் மற்றும் கட்டிடங்கள் பெருமளவு சிதைக்கப்பட்டுள்ளன. போர் நிறுத்தம் ஒன்று வரக்கூடும் என்று எதிர்பார்க்கப் பட்டதற்குப் பல காரணங்கள் இருந்தன. அரசு தரப்பிலும் புலிகள் தரப்பிலும் ஒரு போர் நிறுத்தத்திற்காக பலரும் முயற்சி எடுப்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

ஆயினும் சனவரி மாதம் புதுவருடப் போர்நிறுத்தம் போல இம்முறை ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தத்தைப் புலிகள் அறிவிக்கவில்லை மாறாக வடக்கிலிருந்து வெளியேயும், வெளியிலிருந்து வடக்கிற்கும், யாரும் செல்வதற்கான அனுமதி இரு தரப்பாலும் தடை செய்யப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி தமது அனைத்துப் பேச்சுக்களிலும் வன்முறையினால் பிரச்சினையைத் தீர்த்து விட முடியாது முடியாது என பேசி வந்த போதும் வன்முறையைக் கைவிடுவதற்கான உத்தரவை இடுவதற்கான எந்த அறிகுறியையும் காட்டவில்லை. சமய அனுட்டானங்களிலும் அவை பற்றிய பிரச்சாரங்களிலும் தகவல் தொடர்பு சாதனங்களை முடுக்கி விட்டளவிற்கு பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சிகளுக்கு பயன்படுத்துவதில் அரசு அக்கறை காட்டவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க தாம் மனப்பூர்வமாக முயல்வதாகச் சொல்லிக் கொண்ட போதும் அரசு தரப்பினர் அதற்காக எந்த முயற்சியையும் வெளிப்படையாக எடுக்கவில்லை. இரகசியமாக ஆங்காங்கே பேச்சுவார்த்தை நடப்பதாகவும், புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு வரத் தயாரானால் பேச முடியுமெனக் குறிப்பிடுகிறதுமான செய்திகள் வந்த போதும் அவை வெறுமனே மக்களை ஏமாற்றும், நடைமுறைக்குச் சாத்தியமற்ற செய்திகளாவே தெரிகின்றன.

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் கடந்த 19ம் திகதி ஆரம்பமான போது ஜனாதிபதி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வருமாறு புலிகளிடம் அழைப்பு விடுத்திருந்தார். அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் இதை வரவேற்றுப் பேசின. ஆனால் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்க அரசிடம் என்ன இருக்கிறது என்று அரசு சொல்லவுமில்லை, பீராட்டிய தமிழ்க் கட்சிகள் கேட்கவும் இல்லை. தேவையான விட்டுக் கொடுப்பிற்கும் சமரசத்திற்கும் நாங்கள் தயாராயிருக்கிறோம் என்று புலிகளை நோக்கி ஜனாதிபதி அழைப்பு விட்டிருக்கிறார். ஆனால் பல்லாண்டு காலமாக நிலவி வந்த தப்பெண்ணங்களை நீக்க திடசங்கர்ப்பம் பூண்டுள்ள ஜனாதிபதிக்கு தாம் எதை விட்டுக் கொடுக்க முடியும், எதை விட்டுக் கொடுத்தால் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று தாம் நம்புகிறார் என்பதை சொல்வது அவசியமாகப் படவில்லை; தமிழ்க் கட்சிகளுக்கும் அது தேவைப் படவில்லை!

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சமரசம் செய்து கொள்ள வைப்பது தான் அரசின் நோக்கமாக இருக்கிறதே ஒழிய பிரச்சினையைத் தீர்ப்பது அல்ல என்பது எமது கடந்தகால சிக்கல்களை நிதானமாகக் கவனிக்கும் ஒருவருக்கு மிகத் தெளிவாகவே தெரியவரும். பேனாக் கத்தியால் பிளக்க முடிந்த ஒன்றிற்குக் கோடரியை உபயோகிப்பது போல அரசு தொடர்ந்தும் வட்ட மேசை அது இதென்று இழுத்தடிப்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

ஒரு புறம் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு மேலும் மேலும் வலுவூட்டுகிற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டே மறுபுறம் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் அதற்காக முயல்கிறோம் என்றும் அரசு கூறி வருகிறது.

உண்மையில் நம் முன்னுள்ள கேள்வி, தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை வழங்குவது சம்பச்தப் பட்டதா அல்லது புலிப் பிரச்சினையைத் தகர்ப்பதா என்பதே! புலிகளை ஆயுத ரீதியாக ஒடுக்கி விடுவதில் அல்லது பலவீனப் படுத்தவதில் அரசு காட்டுகிற தீவிரம் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையைத் தீர்பதில் இல்லை. இரண்டுக்கும் ஒன்றோடொன்று சம்பந்தமில்லை எனக் கரு தும் பிற தமிழ்க் கட்சிகளும் இதைப் புரிந்து கொண்டதாக சொல்வதாகத் தெரியவில்லை.

அரசுக்கு மிகவும் தெளிவாகத் தெரிந்த விடயம் அது. தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு அரைகுறைத் தீர்வைத் திணித்து அமைதிகாண வேண்டுமானால் அதற்கு ஒரே வழி புலியைப் பணிய வைப்பது தான் என்பது அரசின் கொள்கை. இதன் மூலம் அரசே தமிழ் மக்களின் பிரச்சினைக்கும் புலிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகக் காட்டி வருகிறது.

தமிழ்க் கட்சிகளுக்கோ, பிரச்சினை தீர்க்கப்படுகிறதோ, இல்லையோ புலிகளை வழிக்குக் கொண்டு வந்தால் சரி என்ற கொள்கை.

இரண்டுக்கும் நடுவில் நூற்றுக் கணக்கில் செத்துக் கொண்டும் கடந்த பத்துமாதங்களுக்கு மேலாக அகதி முகாம்களில் வாடிக் கொண்டும், அரும்பாடு பட்டு சேர்த்த சொத்துக்களை இழந்து பட்டினியால் துடிதுடித்துக் கொண்டும் இருக்கின்றார்கள். ரூமேனியாவில் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் குழந்தைகளையும், ஈராக் எல்லைப் பிரதேசத்தில் யுத்தத்தினால் குவியும் அகதிகளையும், காயமடைந்து குழந்தைகளையும் படம் பிடித்துக் காட்டுவதில் கவனம் செலுத்துகிற அரச சார்பு தொடர்பு சாதனங்கள், வடக்கு கிழக்கு மக்களின் அவலங்களையிட்டு எந்த அக்கறையையும் காட்டுவதில்லை. வடக்கிலிருந்து கொழும்பு நோக்கி வரத் துடித்த மக்கள் கூட்டத்தின் முண்டியடிப்பினைச் சகிக்க முடியாமல் அவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும், அதன் மூலம் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டும் மற்றும் பலர் காயமடைந்ததும், பத்திரிகைகளுக்கு மக்கள் மீது தவறு கண்டுபிடிக்கக்கும் விடயமாகிப் போயிருக்கிறது (உ-ம் வீரகேசரி ரிப்போட்!)

பொது மக்கள் மீதான தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும் மிகச் சாதாரணமான விடயங்களாகி விட்டன. நாட்டின் இன்னொரு பகுதியில் மக்கள் ஒவ்வொரு கணமும் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது இங்கே யாருக்கும் உறைப்பதில்லை. முழு நாட்டையும் இராணுவ மயப்படுத்தி, முழு மக்களிடமும் கொலைக் கலாசாத்தை வளர்த்து விட்டு அவற்றை மதச்சடங்குகளாலும், தேர்தல்கள் மூலமாக சனநாயகம் வாழ்வதாகப் பிரச்சாரம் செய்வதன்

மூல்மாகவும் மூடி மறைத்துக் கொண்டு இயங்குகிறது அரசு. அனைத்துப் பாராளுமன்ற எதிர்க்கட்சிகளும் இதில் அரசாங்கத்துடன் கைகோர்த்தபடி!

சஞ்ஜித்

மக்களைப் பற்றிக் கொஞ்சமேனும் கவலைப்படாத அரசு, விடுதலை இயக்கங்கள் பாராளுமன்ற எதிர்க் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து மக்களை வைத்துப் பிழைப்பு நடாத்துகின்றன! தேர்தல், பேச்சுவார்த்தை, அதிர்ஸ்ட சாலியாக்கும் பல பத்து அதிஸ்டச் சீட்டு முறைகள், மக்கள் மயப்படுத்தும் திட்டங்கள்........ இவையெல்லாம் - இந்த ஏமாற்றுக்கள் எல்லாம் ஒரு நாள் மக்களுக்குப் புரியத்தான் போகிறது. அன்றைக்கு இவர்கள் மக்களுடைய தீர்ப்புக்குப் பதில் சொல்ல வேண்டி வரத்தான் போகிறது.

அதுவரை ஜமாய்க்கட்டும் அவர்கள்! பதில்: வட்டியும் முதலுமாகத் தானே.

## கலைஞனும் அரசியலும்....

கொள்ள வேண்டிவரும். அப்போது நம்முடைய மாற்று என்ன என்கிற கேள்வியை உருவாக்கி அதற்குப் பதில் வைத்திருக்க வேண்டும். அத்தகைய

முன்னோக்கிய சிந்தனை எங்கள் தலைவர் கொண்டபள்ளி சீத்தாராமையாவிடம் இருந்தது. மக்கள் பணி செய்ய விரும்பும் யாரும் கிராமப் புறங்களுக்குச் சென்றேயாக வேண்டும் என்பதையும் நாங்கள் சரியாகச் செயற் படுத்தினோம்.

(iii) காடு மற்றும் கெரில்லா யுத்தம் பற்றிய சரியான கொள்கையை (forest concept) உருவாக்கிச் செயற்படுத்தினோம். தண்டகாரண்யம் என்பது வங்கதேசத்தைப் போல இரண்டரை மடங்கு பெரிய காடு. ஆந்திராவில் தொடங்கினால் அஸ்ஸாம் வழியாகச் சீனாவரை போக முடியும். தலைமறைவாக இருந்த போதெல்லாம் இந்த அரசு எந்திரத்தால் எங்களை ஒன்றும் செய்ய முடியாமல் எங்களைச் சுற்றிச் சுமார் இரண்டரை இலட்சம் ஆயுதம் தாங்கிய மலையின மக்கள் இருந்தனர். அரசிற்கு எதிரான கடுமையான சவாலாகவே நாங்கள் தொடர்ந்து இருந்து வருகிறோம். கடந்த இருபது ஆண்டுகளில் கிட்டத்தட்ட 2000 தோழர்களை நாங்கள் பலி கொடுத்துள்ளோம். கடந்த நான்கைந்து ஆண்டுகளில் மட்டும் சுமார் 400 முதல் 500 தோழர்கள்வரை பலியாகியுள்ளனர். நூற்றுக்கணக்கான வீடுகள் இடித்து நொறுக்கப்பட்டன. ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிறையிடப்பட்டனர். ஒரு சரியான எதிர்த்தாக்குதல் மூலமாகவே இத்தகைய தாக்குதலைச் சமாளித்து வெற்றி பெற்றிருக்கிறோம். இது மட்டுமல்ல, சதிகாரர்கள் கட்சியை உடைக்க முயன்றபோதும் அதினை முறியடித்து அவர்களை எற்றித் தள்ளியிருக்கிறோம்.

*நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். அரசதிகாரிகளையும், மண்டல் பரிஷத் தலைவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் உங்களது மக்கள் யுத்தக் குழு கடத்திச் செல்வதென்பது அரசியல் ரீதியாக நீங்கள் காலாவதியாகி விட்டதன் அடையாளம் என்றல்லவா சொல்லப்படுகிறது. மக்கள் ஆதரவை இழந்து போய் விட்டதால்தான் இத்தகைய சாகசங்களில் இறங்கியிருக்கிறீர்களாமே?*

அப்படிச் சிலர் சொல்லலாம். மக்கள் ஆதரவை நாங்கள் இழந்து விடவில்லை என்பதை வரலாறு நிரூபித்துவிட்டது. தண்டகாரண்யம் பற்றிச் சொன்னேன். அது முழுமையும் எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது. நாங்கள்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறோம். 'ஒரு காட்டிலாகா அதிகாரி, ரேஞ்சர் உள்ளே நுழைய முடியாது.

நான் தலைமறைவாய் இருந்து சமீபத்தில் வெளியே வந்த போது இயக்க ரீதியான எந்த விளம்பரமும் இல்லாமல் வெறும் பத்திரிகைச் செய்திகளைக் கொண்டே முதல் கூட்டத்திற்கு நான்கு இலட்சம் பேர் திரண்டனர். சென்ற மே மாதத்தில் வாரங்கல்லில் நடந்த எங்கள் நிகழ்ச்சிக்கு 10லிருந்து 15 இலட்சம் பேர் வரை திரண்டனர் என்பதைப் பத்திரிகையில் நீங்கள் படித்திருப்பீர்கள். நாங்களா மக்கள் ஆதரவை இழந்துவிட்டோம்?

ஆட்சியாளரைக் கடத்துவது என்பது நாங்கள் கண்டுபிடித்த வடிவமல்ல எங்கள் மீது திணிக்கப் பட்டது அது. எங்கள் தோழர்களில் பலரும் போலீசால் கடத்திச் செல்லப்பட்டே கொல்லப் பட்டிருக்கிறார்கள். இதற்குச் சரியான பதிலடியாக நாமும் ஆட்சியாளரைக் கடத்துவது என்கிற வடிவத்தை எங்களைச் சுற்றியிருந்த மக்கள்தான் முன்வைத்தனர், கடைசியாகச் சுமார் 30 தோழர்கள் அரசால் கடத்தப்பட்டனர். நாங்கள் கேட்டது இதுதான். எங்கள் தோழர்களை என்ன செய்தீர்கள்? உயிருடன் இருந்தால் நீதி மன்றத்திற்குக் கொண்டு வந்து வழக்குப் போடு. கொன்று போட்டிருந்தால் உண்மையைச் சொல். இந்தக் கோரிக்கை நியாயமானதில்லையா? சனநாயகமானதில்லையா? இதற்கு அரசுத் தரப்பிலிருந்து பதிலில்லை. நாங்கள் நடவடிக்கையில் இறங்கினோம். இது ஆட்சியாளருக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியமாய் அமைந்தது. நல்ல விளைவுகளைத் தந்தது. நாங்கள் கடத்திச் சென்ற ஒருவரைக்கூட அரசால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதே மக்கள் எங்களோடு இருக்கிறார்கள் என்பதற்கு நிரூபணம் இல்லையா?

— இன்னும் வரும்...

சரிநிகர் மாத இதழ், இல. 6, அலோ சாலை, கொழும்பு-3, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம், (MIRJE) சார்பில் ஈ. பாலகிருஷ்ணனால், கொழும்பு-10, லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 15.05.1991